திருவள்ளுவ
ஆண்டு 200
ஆவணி
1974 ஆகஸ்ட்

அருளோசை

சமய பாட போதனைத் திங்களிதழ்



வேதத்தை வேதத் தின்சுவைப் பயனை
விழுமிய முனிவர்கள் விழுங்கும்,
கோதிலின் கனியை நந்தனுர் களிற்றைக்
குவலயத் தோர்தொழு தேத்தும்
ஆதியை யமுதை யென்னை யாளுடைய
அப்பனை ஒப்பவ ரில்லா
மாதர்கள் வாழும், மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே.

தமிழ்நாடு தெய்விகப் பேரவை
9, மகாராஜா சூரியராவ் சாலை,
சென்னை-600 018
தொலைபேசி : 76828

அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில்

சுவாமிமலை

(தஞ்சை மாவட்டம்)

—:o:—

அருள்மிகு சுவாமிநாதப் பெருமானுக்குச் சென்ற 7-6-73-ல் கோடி அர்ச்சனை ஆரம்பிக்கப்பெற்று, வருகின்ற 27-8-74-ந் தேதி அன்று பூர்த்தி ஆகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதுவரை கோடி அர்ச்சனையில் பங்கு பெருத அன்பர்கள் விரைந்து பங்கு பெற்று "வேண்டுவனவெல்லாம் பூர்த்தி செய்து கொடுக்கும் கலியுகத்தில் கண்கண்ட தெய்வம்" ஸ்ரீ சுவாமிநாதப் பெருமான் அருள்பெற வேண்டுகின்ருேம்.

அர்ச்சனை ஒன்றுக்கு ரூ. 15/-. அர்ச்சனை பிரசாதத்துடன் ஸ்ரீ சுவாமிநாதப்பெருமான் திருவுருவம் பொறித்த வெள்ளிக் காசு ஒன்றும் வழங்கப்படுகின்றது. கோடி அர்ச்சனையின் வருவாயிலும், பக்தர்களின் நன்கொடையிலும் ஸ்ரீ சுவாமிநாத சுவாமிக்கு வைர, ரெத்தின ஹஸ்தம் தயாரிக்கப்படவுள்ளது.

நேரில் அர்ச்சனையில் பங்குபெற விரும்புகிறவர்கள் முன் கூட்டியே எழுதினல் தங்க வசதி செய்துதரப்படும். வர இயலாதவர்களுக்குத் தபால் மூலம் பிரசாதம் அனுப்பிவைக்கப்படும்.

டி. எஸ். சுவாமிநாத உடையார்,
அறங்காவலர் குழுத் தலைவர்.

எஸ். மகாலிங்கம், பி.எஸ்ஸி.,
செயல் அலுவலர்.

அறங்காவலர்கள்

எஸ். கோவிந்தசாமிபிள்ளை,
என். சுவாமிநாதன்,
ஜி. முருகேசன்,
ஏ. சிதம்பரம்.

அருளோசை

திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

மணி 3	ஆனந்த ஆவணி 1974 ஆகஸ்ட்டு	ஓசை 2

அருளோசை அன்பர்களுக்கு, வணக்கம்.

முதற்கண் தங்களுக்கு அருளோசையின் சார்பிலும், பேர்வையின் சார்பிலும் சுதந்தரதின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'அருளோசை'யின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட அன்பர்கள் பலர் இதழில் செய்யப்பட வேண்டிய புதிய மாற்றங்கள் குறித்துத் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். அவர்களுடைய யோசனைகளுக்கு எங்கள் நன்றி. அன்பர்களின் கருத்துக்களையும் யோசனைகளையும் பரிசீலனை செய்து, முடிந்த அளவு உரிய காலத்தில் செயலாற்றப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

பல அன்பர்களுடைய சந்தாக்கள் முடிவடைந்தும், இன்னமும் புதுப்பிக்கப்படவில்லை. எனவே, அன்புகூர்ந்து அவர்கள் தங்கள் சந்தாக்களைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டுகிறோம் என்பதை மீண்டும் நினைவூட்டுகிறோம். இதுபற்றி நமது சந்தாதாரர்களுக்குத் தனித்தனியே நினைவூட்டுக் கடிதமும் எழுதியுள்ளோம்.

அன்பர்கள் தங்கள் முகவரி மாற்றத்தை எமக்குத் தெரியப் படுத்தினால்தான், புதிய முகவரிக்கு இதழ் அனுப்ப ஏதுவாக இருக்கும் என்பதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம். முகவரியைத் தெளிவாகப் புரியும் வகையில் எழுதுவதுடன், தவறாமல் உங்கள் ஊர் 'பின்கோடு' எண்ணை யும் குறிப்பிடவேண்டுகிறோம். நன்றி.

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்.

இந்த இதழில்

"அருளோசை"

வினா விடைப் பகுதி-ஜூலை-74

பரிசு பெற்றவர்கள்.

முதல் பரிசு : திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி, கூத்தாநல்லூர், தஞ்சை மாவட்டம், சந்தா எண். 3145.

இரண்டாம் பரிசு : திரு. எம். பி. கிருஷ்ணமூர்த்தி, பிள்ளையார்நத்தம், நெல்லை மாவட்டம், சந்தா எண். 819.

மூன்றாம் பரிசு : திரு. கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி, கூடலையாற்றூர். தென்ஆர்க்காடு மாவட்டம், சந்தா எண். 689.

நான்காம் பரிசு : திரு. வி. ராமசாமி ரெட்டியார், புதுப்பட்டி, திருச்சி மாவட்டம், சந்தா எண். 2372.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருமந்திரம்—3.

சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

திருமந்திரத்திலே உள்ள திருப்பாடல் திருமூலதேவ நாயனர் அருளிய முறைப்படியே அமைந்துள்ளன என வழியில்லை. தந்திரங்களுள் இட்டிருக்கும் தலைப்புக்களும் உண்மைய என்று துணிய முடியவில்லை. எடுத்துக்காட்டாகச் சில கூறுவோம். ஐந்தாவது தந்திரத்திலே உள்ள சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம் என்ற தலைப்புக்களும் பிறவும் பொருந்தாதன. அப்படியாண்டும் இல்லை. ஆசிரியருங் கூறிற்றிலர். அத் தலைப்பின்கீழுள்ள பாடல்களும் அத்தலைப்புக்குப் பொருந்துவனவாயில்லை 'அசுத்த சைவம்' என்ற தலைப்பின்கீழ் கடுஞ்சுத்தசைவர் எனலும், மார்க்கசைவம் என்ற தலைப்பின்கீழ், சுத்த சைவர்க்கே எனலும், சுத்த சைவமே எனலும், கடுஞ்சுத்த சைவம் என்ற தலைப்பின்கீழ், சுத்தசைவர் எனலும் பொருத்தமற்றவை. 'அன்பின் உருகுவன்' (1456) என்ற பாடலுக்குக் கீழ், "சமயங் கிரியையிற்றன் மனங்கோயில்" (1508) என்று தொடங்கும் பாடல் இருந்தது போலும் என்க.

"சன்மார்க்கத்தார்க்கு முகத்தொடு பீடமுஞ்
சன்மார்க்கத்தார்க்கு மிடத்தொடு தெய்வமும்
சன்மார்க்கத்தார்க்கு வருக்கம் தரிசனம்
எம்மார்க்கத்தார்க்கும் இயம்புவன் கேண்மினே" (1481)

என்றருளிய ஆசிரியர், கேட்குமாறு இயம்பிய இடம் தெரியவில்லை. இஃது ஐந்தாவது தந்திரத்திலே ஒன்பதாவது தலைப்பாகிய சன்மார்க்கம் என்றதன்கீழ் ஆருவது திருப்பாடலாக உள்ளது. இதிற் கேண்மின் இயம்புவன் என்றவாறு இயம்பும் இடம் தெரிந்திலது. ஒன்பதாவது தந்திரத்திலே, குருமட தரிசனம் என்றுள்ள தலைப்பின்கீழ்,

'இயம்புவன் ஆசனத் தோடுமலையும்
இயம்புவன் சித்தக் குகையும் இடமும்
இயம்புவன் ஆதாரத்தோடு வனமும்
இயம்புவன் ஈரா றிருநிலத் தோர்க்கே. (2652) என்றும்,

முகம்பீடம் மடமடம் முன்னிய தெய்வம்
அகம்பரவர்க்கமே ஆசில்செய் காட்சி
இகம்பரம் ஆதனம் எண்ணெண் கிரியை
அகம்பரந் தற்குகைக் காதாரந் தானே. (2653) என்றும்

ஆயிரத்திருநாற்றெழுபத்தொரு பாடலுக்கப்பால் இயம்பியதாக உளது. 'ஒன்பதாந்தந்திரம் முற்பகுதி'யுரையிலே 'முகம்பீடம்' என்றதற்கு "முகப்பு அடிப்படை" என உரைத்திருக்கின்றது. "முகத்தொடு பீடம்" (1481) என்றதும் "அகமுகமாம் பீடம் ஆதாரம் ஆகும்" என்றதும் நோக்கி உண்மையை உணர்தல் வேண்டும். "அகம் முகம் ஆகும். பீடம் ஆதாரம் ஆகும்" என்பதே திருமூலதேவநாயனார் திருவுள்ளம். 'அடி நிலை யுள்ளமே இறைவனுக்கு இருக்கையாகும்' என்பது முதலியன எப்படிப் பொருந்தும் உரையாகும்?

வருக்கம் சராசரம் (1476) "வருக்கம்.........சராசரம்" (2678) வருக்கம் தரிசனம் (1482) 'அகம்பரவர்க்கம்' (2653) 'ஆசில்செய் காட்சி' (2653) 'நிலையில் தரிசனம் தீபநெறி' (1679) என்பனவற்றை ஒருங்குவைத்து நோக்கி உண்மையைத் தேர்ந்து கோடல் சாலச் சிறந்ததாகும். 'இடத்தொடு தெய்வம்' (1482) என்றதால், "முன்னிய தெய்வம்" (2653) என்றலே உண்மைப்பாடம். முன்னியதேயம் என இருப்பது பிழையே. "செகமுகமாந் தெய்வமே சிவும் ஆகும்" (2654) என்றதே அதுபிழை என்பதை வலியுறுத்தும். இஃதும் "அகமுகம் ஆய்ந்த அறிவுடையோர்க்கே" விளங்கும்.

'சந்திர பூமிக்குடன் புருவத்திடைக் கந்தமலர்' என்று இப்போதுள்ள பதிப்புக்களில் காணப்படுவது, இடையே ஒரு டகரமெய் இருந்ததாய்ப் பின் பிழைபட்டது. பூமிக்குள் தன் புருவத்திடை என்றதே உண்மைப் பாடம். குட்டன்புரு எனப் பாடபேதமும் அடியிற் காட்டப்பட்டுளது.

ஈரும் மனத்தை யிரண்டற வீசும்இ
ஊரும் சகாரத்தை ஓதுமின் ஓதியே
வாரும் அரனெறி மன்னியே முன்னியத்
தூருஞ் சுடரொளி தோன்றலும் ஆமே. (1564)

இத்திருமந்திரத்திலே, "இ ஊரும் சகாரம்" என்றது மிகுபஞ்சாக்கரம் ஆகிய சிகாரத்தை. அத்திருவைந்தெழுத்தோதிய பயன் சுடரொளித் தோற்றம் என்றதும் அவ்வுண்மையை விளக்கும். இத்திருப்பாடல் இப்போதுள்ள பதிப்புக்களுள்,

"ஈரும் மனத்தை யிரண்டற வீசுமின்
ஊருஞ் சகாரத்தை ஓதுமின்" என்றிருக்கின்றது.

இப்பாடத்தில், சகாரத்தை ஊரும் எழுத்து ஈது என்று குறிக்கப்பட்டிலது. ஓதுமின் ஏவல்வினைக்குச் செயப்படுபொருள் இன்னது எனத் திட்டவட்டமாகக் கூறப்படாத குற்றம் உண்டாகின்றது. 'ஓதியேவாரும்' என்ற கட்டளையும் அரனெறி மன்னுதல், முன்னுதல், சுடரொளி தோன்றுதல் என்னும் பயனும் நோக்கி ஆராயின், "மிகுபஞ்சாக்கரம்" ஆகிய இ ஊரும் சகாரத்தை யோதுமின் என்றதே உண்மைப்பாடம் என்று தோன்றப்பெறுவர் அறிஞர்.



வடதிருமுல்லைவாயில் மாசிலாமணீசுவரர் கோயில்

திரு. கே. எஸ். நரசிம்மன், பி.ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ்.,
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை.

தல இருப்பிடம்: சமயச் சான்றோர், தேவாரப் பாடல் பெற்ற தலங்களை நாட்டுப் பகுதிகளாகப் பிரிக்கும்போது தொண்டைநாட்டில் 32 சிவத்தலங்கள் இருக்கிறதாகக் கணக்கிட்டுள்ளனர். அவற்றில் ஒன்று வடதிருமுல்லைவாயில். தஞ்சைமாவட்டத்தில் சீர்காழிக்குக் கிழக்கே திருமுல்லைவாயில் என்ற பாடல் பெற்ற தலம் ஒன்று இருப்பதால், அதற்கு வடக்கேயுள்ள இத்தலத்திற்கு 'வடதிருமுல்லைவாயில்' என்று பெயரிட்டனர். புழலேரியின் கரையிலிருக்கிறது. இத்தலம் செங்கற்பட்டு மாவட்டம் சைதாப்பேட்டை வட்டத்திலிருக்கிறது. இது ஆவடி இரயில் நிலையத்திலிருந்து இரண்டரைக் கல் தொலைவிலும், அம்பத்தூர் இரயில் நிலையத்திலிருந்து ஒன்றரைக் கல் தூரத்திலுமிருக்கிறது. சென்னையிலிருந்து பேருந்துகள் செல்கின்றன.

பெயர்க் காரணம்: பழங்காலத்தில் இந்த இடம் முல்லைக் காடாயிருந்தது. தொண்டை நாட்டு மன்னன் ஒருவன் வேட்டையாடி வரும்போது, அவனுடைய யானையின் காலில் முல்லைக்கொடி சிக்கிக்கொண்டது. யானை நின்று விட்டது. அரசன் கீழே இறங்கி வாளால் முல்லைக் கொடியை வெட்டவே இரத்தம் வெளிப்பட்டது. அகழ்ந்து பார்க்கும் போது ஒரு சிவலிங்கம் காட்சியளித்தது. (மூலமூர்த்தியின் திருமுடியில் வெட்டுக் குறி இன்றுமுளது). அரசன், காட்டை அழித்துக் கோயில் அமைத்தான். முல்லை வனத்தில் சிவபெருமான் எழுந்தருளியிருத்தலால் இதற்குத் "திருமுல்லைவாயில்" என்ற பெயர் எற்பட்டது. தல விருட்சமும் முல்லைதான். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தலத்து இறைவன்மேற் பாடியருளிய திருப்பதிகத்தின் 10-ஆவது திருப்பாசுரத்தில் இந்த வரலாற்றைக் கீழ்வருமாறு குறித்திருக்கிறார்:—

"சொல்லரும் புகழான் தொண்டைமான்
களிற்றைச் சூழ்கொடி முல்லையாற் கட்டிட்
டெல்லையி லின்பமவன் பெற வெளிப்பட்
டருளிய இறைவனே"

கோயில் அமைப்பு : ஊர் நடுவே கோயில் நடு நாயகமாய் அமைந்திருக்கிறது. சந்நிதி கிழக்குப்பார்த்தது. ஆனால் கோபுரம் தெற்குவாயிலை அணி செய்து நிற்கிறது. அதன் எதிரில் வெளியே உயரமான அழகிய 16 கால் மண்டபம் இருக்கிறது. தெற்குக் கோபுர வாயிலில் உள்ளே நுழைந்ததும் எதிரே விநாயகர் சந்நிதியிருக்கிறது. அதன் விமானத்தில் வெள்ளைச் சலவைக்கல்லினாலான விநாயகர் உருவம் ஒன்றும் உள்ளது. கோயிலில் விசாலமான வெளிப்பிரகாரம் இருக்கிறது. தென்மேற்கு மூலையில் உற்சவ மண்டபம் இருக்கிறது. வடக்குப் பிரகாரத்தில் முருகன் வள்ளிதெய்வயானையுடன் கோயில் கொண்டிருக்கிறார். அந்தச் சந்நிதிக்குப் பக்கத்தில் கிழக்கு நோக்கி 'சோழபுரீசர்' சந்நிதியும், மேற்கு நோக்கி 'குசலபுரீசர்' சந்நிதியும் இருக்கின்றன. கிழக்குப் பிரகாரத்தில் சூரியன், பைரவர் தனிச் சந்நிதிகள் இருக்கின்றன. நந்தியெம்பெருமான் இறைவன் முகமாகப் பார்க்காமல் கிழக்கு நோக்கி யிருக்கிறார். மாசிலாமணீசர் சந்நிதிக்கு நேரே கிழக்குப் பக்கம் ஒரு வாயில் இருக்கிறது. அம்பிகை சந்நிதி இறைவன் சந்நிதிக்கு வலப்புறம் அமைந்திருக்கிறது. பொதுவாக எல்லாக் கோயில்களிலும் இடப்பக்கமே இருக்கும். சுவாமி அம்பிகைசந்நிதிகளைச் சுற்றி உட்பிரகாரங்கள் இருக்கின்றன. மூலலிங்கத்தின் முன்புறம் அர்த்தமண்டபத்தில் இரண்டு எருக்கந்தூண்கள் இருப்பது தனிச் சிறப்புடையது. கோயிலுக்கு வெளியே கிழக்குப் பக்கத்தில் நான்குபுறங்களிலும் படிக் கட்டுகளுடைய 'கலியாணதீர்த்தம்' என்ற அழகிய திருக்குளமும் இருக்கிறது.

மூர்த்திகள் : இறைவன் திருப்பெயர் 'மாசிலாமணீசுவரர்' என்பது. பாடலில் 'முல்லைவாயிலாய் மாசிலாமணியே' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறுகிறார். 'முல்லையழகர்', 'வெட்டுத்தாங்கிய ஈசர்' என்ற பெயர்களும் உண்டு. அம்பிகையின் திருநாமம் 'கொடியிடை நாயகி'. "கூடிய விலயஞ்சதி பிழையாமைக் கொடியிடை யுமையவள் காண ஆடிய அழகர்" என்று சுந்தரர் குறிப்பிடுகிறார். 'பிரமசூத்திரங்களுக்குச் சிவாத்துவித முறையில் பாஷ்யம் இயற்றிய நீலகண்ட சிவாசாரியார் உருவமும், தொண்டைமான் ச்க்கரவர்த்தியுருவமும் கோயில் முன் மண்டபத்திலிருக்கின்றன.

தலத்தைப் பற்றிய நூல்கள் : சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவொற்றி யூரில் சங்கிலியாருக்குக் கொடுத்த வாக்குறுதியை மறந்து எல்லை தாண்டியதும் கண்ணொளி மங்கிவிட்டது. "அழுக்கு மெய்கொடு உன்திருவடி அடைந்தேன்" என்று தொடங்கும் பதிகத்தைப் பாடிக் கொண்டு திருமுல்லைவாயில் வந்தடைந்தார். இறைவன்மீது பதினொரு பாசுரங்களை உடைய திருப்பதிகம் ஒன்றை ஓதியருளினார். "படுதுயர் களையாய் பாசுபதாபரஞ்சுடரே" என்று ஒவ்வொரு பாடலும் முடிகிறது. இதை "இடர் களையும் பதிகம்" என்று ஆன்றோர் கூறுவர்.

அருணகிரிநாதர் "மருமல்லிமாவன நீடிய பொழில் மெல்லிகாவன மாடமை வடமுல்லைவாயிலில் மேவிய பெருமாளே" என்றும், "சொல்லு முனிவோர் தவம் புரிமுல்லை வடவாயில் வந்தருள்" என்றும், "வாச்மா

மலராளுெடு செந்திரு மார்பினில் வீறிய மாயவனும் பணி மாசிலாமணி ஈசர் மகிழ்ந்தருள் பெருமாளே" என்றும் திருப்புகழில் பாடியிருக்கிருர்.

சிவஞானசுவாமிகள் நூறு பாடல்கள் அடங்கிய 'வட திருமுல்லை வாயில் அந்தாதி' என்ற நூலை இயற்றியிருக்கிருர்கள்.

வடலூர் இராமலிங்கவள்ளலார் தம் அருட்பாவில் 10 பாடல்களை யுடைய 'அருளியல் விஞவல்' என்ற பதிகமும், 'திருவிண்ணப்பம்' என்ற பதிகமும் பாடியிருக்கிருர். அவற்றில் ஒரு பாடல் கீழ்வருவது:

வண்ணமா முல்லைவாயிலின் மேவிய
அண்ணலே அமுதே அரசே நுதல்
கண்ணனே உனைக் காணவந்தோர்க் கெலாம்
நண்ணருந் துயர் நல்குதல் நன்றதோ.

செய்யுட்களாலான தலபுராணம் ஒன்று அச்சிடப் பெற்றிருக்கிறது. இப்போது அது கிடைப்பது அரிதாகிவிட்டது. 'தோத்திரப் பாமஞ்சரி' என்ற நூல் ஒன்றும் சில ஆண்டுகளுக்கு முன் அச்சிட்டு வெளியிடப் பெற்றிருக்கிறது.

கல்வெட்டுகள் : இந்தக் கோயிலிலுள்ள கல்வெட்டுகளை 1904-ஆம் ஆண்டில் அரசாங்கத்தார் படியெடுத்துப் பதிவு செய்திருக்கின்றனர். "ஜெயங்கொண்ட சோழமண்டலத்துப் புழற்கோட்டத்து அம்பத்தூர் நாட்டுத் திருமுல்லைவாயில்" என்று குறிக்கப் பெற்றிருக்கிறது. உத்தம சோழன், முதலாம் இராஜேந்திரன், மூன்ரும் குலோத்துங்கன், மூன்ரும் இராஜராஜன், சடாவர்மன் சுந்தரபாண்டியன், விஜயநகர அரிகரராயர், வீரப்பிரதாப புக்கராயர், மல்லிகார்ச்சுனராயர் முதலிய மன்னர்களின் கல்வெட்டுகள் அவை. விளக்கு எரிக்க, பூசை வழிபாடு முதலிய வற்றிற்காக நிலம், ஆடுகள் முதலியவற்றைத் தானம் அளித்த செய்தி களை அவை கூறுகின்றன. பச்சையப்ப முதலியார் உச்சிக்கால பூசைக்குப் பொருள் வழங்கியதும், மயிலாப்பூர் செல்லம்மாள் சாயங்காலக் கட்டளைக் காகப் பொருள் வழங்கியதும் பற்றிக் கூறும் இரண்டு கல்வெட்டுகளும் தெற்குக் கோபுரவாயிலுக்கு வெளியில் காணப்படுகின்றன.

திருப்பணி: விஜய நகர சாம்ராஜ்ய வீழ்ச்சிக்குப்பின் உள்ளூர் வேளிர் தலைவர்களால் இக்கோயில் கண்காணிக்கப்பெற்று வந்தது. 1805-ஆம் ஆண்டில் மாசிலாமணி முதலியார் என்பவரால் ஓரளவு பழைய நிலைக்குக் கொண்டு வரப்பெற்றது. பின்னர் அவர் உறவினர் நைசாம் முனியப்ப முதலியார் என்பவரால் இப்போதுள்ள கோபுரம் கட்டப்பெற்றது. தமிழ்நாடு தெய்விகப் பேரவை இந்தக் கோயிலை ஒரு முன்மாதிரிக்கோயிலாக அமைக்கவேண்டும் என்று அதன் திருப்பணியை ஏற்றுக்கொண்டிருக்கிறது. 1,36,000 ரூபாய் மதிப்பீட்டில் கோபுரம், சுவாமி அம்மன் விமானங்கள் பிரகாரங்கள் முதலியவற்றின் திருப்பணி நடந்தேறி வருகிறது.

குறிப்பு:—ஆனந்த ஆண்டு ஆவணித் திங்கள் 13-ஆம் நாள் (29-8-74) வியாழக்கிழமை நடைபெறவிருக்கும் குடமுழுக்கு விழாவையொட்டி இக்கட்டுரை மீண்டும் பிரசுரமாகிறது.

வருக ! இராமேஸ்வரம்

இராமேசுவரம் தீவில் அமையப்பெற்றுள்ள அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில் மனம் கவரும் புராதன சிற்பக்கலைக் காட்சிகளுடனும், மிகப்பெரிய பிரகாரங்களையும் கொண்டதாக விளங்குகிறது. இராமாயண வரலாற்றுத் தொடர்பு கொண்டுள்ள இத்தலம் பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்றாக விளங்குவதுடன், வடக்கே காசியும், தெற்கே இராமேசுவரமும் என இந்துக்களுக்குத் தலைசிறந்த இரு பெரிய புண்ணிய தலங்களாகும்.

இத் திருக்கோயிலில் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. சேவார்த்திகள் வசதியாகத் தங்கவும், முறையாக வழிபடவும், இங்கு முக்கிய மாகக் கருதப்படும் இலக்குமண தீர்த்தம், தனுஷ்கோடி, கந்தமாதன பர்வதம் முதலான இடங்களுக்குப் போவதற்கு வசதியும் இக்கோயில் நிர்வாக அதிகாரியை அணுகுவதன் மூலம் அடையலாம்.

இக்கோயிலில் ஸ்ரீ இராமநாதசுவாமிக்கும், ஸ்ரீ பர்வத வர்த்தினி அம்பாளுக்கும் நடைபெறும் கோடி அர்ச்சனையில் சகஸ்ரநாமம் ஒன்றுக்கு ரூ. 10/– வீதம் கட்டணம் செலுத்தி அர்ச்சனை செய்து திருவருள் பிரசாதமும், வெள்ளிக் காசும் பெறலாம்.

இக்கோயிலில் நடைபெற்று வரும் மாபெரும் திருப் பணிக்குத் தாராளமாக நன்கொடை வழங்க வேணுமாய் வேண்டப்படுகிறது. இந்த நன்கொடைக்கு வருமானவரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இராமேசுவரம்,
தமிழ்நாடு.

நிர்வாக அதிகாரி
அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில்.

மெய்ப்பொருள் காண்பது அறிவு

"வன்தொண்டன் என்பதோர் வாழ்வு"

டாக்டர் வித்துவான் திரு. வை. இரத்தினசபாபதி, எம்.ஏ., பி.ஓ.எல்., பிஎச் டி.,

முன்னுரை :

சைவ சமய ஆசாரியர்கள் நால்வர். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர், திருநாவுக்கரசு நாயனர், சுந்தரமூர்த்தி நாயனர், மாணிக்க வாசக சுவாமிகள் என்ற பெயரால் அவர்கள் அழைக்கப்பெறுவர். இந் நால்வருள் மூன்ருமவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கே "வன்தொண்டர்" என்ற பெயர் உண்டு.

'சுந்தரமூர்த்தி சுவாமிகள்' என்ற பெயர் அவருக்கு இம்மண்ணுலகில் வாய்த்த பெயரன்று. திருக்கயிலையில் சிவபெருமானுக்கு இரண்டு முக்கியத் தொண்டுகளைக் மேற்கொண்டிருந்தார். நந்தவனங்களிற் சென்று சிவபெருமான் விரும்பிச் சூடுவதற்கு ஏற்ற மதுமலர்களைக் கொய்து கொண்டு வந்து மாலையாகக் கட்டிச் சாத்துவது ஒரு தொண்டு. இரண்டாவது தொண்டு இமையவர்களுக்குங் கிட்டாத அருமையுடையது. சிவபெருமான் திருமேனியில் தரித்துக் கொள்ளக்கூடிய தூய திருநீற்றை (விபூதி)த் தயாரித்து வைப்பது. இதனைச் சேக்கிழார் பெருமான்,

"வெள்ள நீர்ச்சடை மெய்ப்பொருளாகிய
வள்ளல் சாத்தும் மதுமலர் மாலையும்
அள்ளும் நீறும் எடுத்து அணைவான்"

என்று குறிப்பிடுவதைக் காணலாம்.

மேலே குறிப்பிடப்பெற்ற இந்த இருவகைத் தொண்டுகளையும் செய்துவரும் தொண்டருக்குத் திருக்கயிலையில் வழங்கப்பெற்ற பெயர் "ஆலால சுந்தரன்" என்பது.

'ஆலால சுந்தரன்' என்ற பெயர் அத்தொண்டருக்கு உண்டாவதற்கு உரிய காரணங்களாக இரண்டு வரலாறுகள் கூறப்பெறுகின்றன.

(1) திருக்கயிலையில் ஒருநாள் சிவபெருமான் பட்டுப் பீதாம்பரம் முதலிய அணிந்து, பொன்முடி கவித்து, பல்வகை ஆபரணங்களையுந் தரித்து, நிலைக் கண்ணாடி முன் வந்து நின்று, தம் அழகைத் தாமே பார்த்துப் பரவசங் கொண்டு, சுந்தரா! என அழைக்க, நிலைக்கண்ணாடியில் தோற்றிய அவ்வடிவமே ஒரு உருவமாக வந்து நின்றது. அவ்வுருவமே 'சுந்தரன்' என்ற பெயரில் இறைவனுக்குத் தொண்டு செய்து வந்தது.

(2) தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடல் கடைந்தபோது 'ஆலகாலம்' என்ற விஷம் தோன்றி, உலகை அழிக்க வந்தது. ஆலகால நஞ்சின் முன்னர் நிற்கலாற்ருது தேவர்களும் அசுரர்களும் சிதறியோடினர். ஆலகால நஞ்சு உலகையே அழிக்க வருகிறது என்ற செய்தியைச்

சிவபெருமான் திருமுன் சென்று விண்ணப்பித்தனர். நஞ்சினை அழிப்ப தற்கு உரிய ஒரேவழி, அதனை உண்பதுதான். உலகையே அழிக்க வரும் ஆலகாலத்தை எடுத்து விழுங்கி அழித்துவிடுவது என்ற முடிவுக்கு வந்த சிவபெருமான், "பரந்துபட்டு வரும் ஆலகால விஷத்தை ஒன்றுசேர்த்துத் திரட்டி, ஒரு உருண்டையாக ஆக்கி எடுத்து வா" என அருகில் நின்ற சுந்தரனுக்கு ஆணையிட, அவரும் அவ்வாறே ஆலகால விஷத்தை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தார்.

தேவர்கள் எந்த நஞ்சினைக் கண்டு அஞ்சி ஓடினார்களோ அந்த நஞ்சினை எதிர்த்து நின்று, அடக்கி, ஒரு கட்டுக்கோப்புக்கு உட்படுத்தி, ஒரு சிறு உருண்டையாக ஆக்குமளவிற்கு ஆற்றல் பெற்றவராக விளங்கினார் சுந்தரர் என்ற தொண்டர். ஆலகால நஞ்சின் ஆற்றலை அடக்கிக் கொண்டு வந்து கொடுத்த அந்த நாளிலிருந்து அத்தொண்டனார் 'ஆலால சுந்தரர்' என வழங்கப் பெற்றார்.

" அன்னவன் பெயர் ஆலால சுந்தரன் "

என்றுமட்டுமே சேக்கிழார் அருளிச்செய்தார்.

பூத்தொண்டும் பூதித்தொண்டும் செய்த தொண்டர் பெற்ற ஆற்றல் தான் என்னே! 'எடுத்து உண்ணுக' என்று இறைவன் ஆணையிட்டிருப்பின் அதையே செய்வர். ஆலகால நஞ்சு சுந்தரரை ஒன்றும் செய்யாது. பூத்தொண்டும் பூதித்தொண்டும் செய்து சிவந்த செங்கைகளானமையின் அவர் கைப்பட்ட மாத்திரத்தே அந்நஞ்சானது தன்னுடைய கொல்லும் தன்மையை இழந்தது. உண்டபிறகு கண்டத்தில் நின்று, கறையெனக் காட்டி, 'திருநீலகண்டம்' என்ற பெயரை உண்டாக்கிய அந்த நஞ்சு, தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகை அருளுவதற்கு வரவிருக்கும் மெய்த்தொண்டனாராம் 'சுந்தரர்' கைகளிலோ, உடலிலோ எத்தகைய மாற்றத்தையும் உண்டாக்கவில்லை.

வளர் திருத்தொண்டின் நெறிவாழ நின்ற சீர்த் திருநாவுக்கரசு நாயனாருக்கு இட்ட நஞ்சு உடலினுள் சென்றும் எத்தகைய மாற்றத்தையும் விளைவிக்கவில்லை. கொல்ல வந்த யானையும் வணங்கி வழிபட்டுச் சென்ற நிலையை வரலாறு காட்டுகிறது. தொண்டின் பெருமையை அளந்தறிந்து கூறவும் ஒல்லுமோ!

'ஆலாலசுந்தரன்' என்ற பெயருடையவராய், திருக்கயிலையில் தொண்டு செய்தவர் மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திட வந்து, திருநாவலூரில் சிவாசாரியார் குலத்தில் சடையனார்க்கும் இசைஞானியார்க்கும் குழந்தையாக அவதாரம் செய்தார். அப்போது அவருக்குப் பெற்றோரால் வைத்து வழங்கப் பெற்ற பெயர் "நம்பி ஆரூரர்" என்பது.

" மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும்
வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு சடையனார்க்கு
ஏதமில் கற்பின் வாழ்க்கைமனை இசைஞானியார்பால்
தீதகன்று உலகம் உய்யத் திருஅவதாரம் செய்தார்
தம்பிரான் அருளி னாலே தவத்தினில் மிக்கோர் போற்றும்
நம்பியாரூரர் என்றே நாமமும் சாத்தி"

என்று சேக்கிழார் கூறியருளினார்.

திருநாவலூரில் அவதாரம் செய்த காரணத்தால் 'திருநாவலூரர்' என்ற பெயரும் இவருக்கு உண்டு.

திருககயலாய வாழ்வை நினைவூட்டும் ஆலாலசுந்தரர் என்ற பெயரைச் சிறிதே மாற்றி, 'சுந்தரமூர்த்தி சுவாமிகள்' என வழங்கும் வழக்கம் உண்டாயிற்று. இதற்குரிய அடிப்படை நிகழ்ச்சியும் ஒன்று உண்டு.

நம்பியாரூரரின் திருமணம் தடைப்பட்டதே யொழிய, திருமணக் கோலம் தடைபெறவில்லை. திருக்கயிலையில் சிவபெருமானுக்குத் தொண்டராக இருந்தாலும் அவருடைய அழகிய கோலம் இறைவனுக்கு உவப்பாகவே இருந்தது. அதே கோலத்தை, இம்மண்ணுலகில், திருமண நாளன்று செய்துகொள்ளுகிறார். அழகுக்கெல்லாம் அழகு செய்வது போல, அலங்காரங்களுக்கெல்லாம் முத்தாய்ப்பாக, முடிமணியாகத் திருநீறு தரித்துக் கொள்கிறார். திருநீறு புனைந்து கொண்ட அழகைச் செம்மாந்து பாடுகிறார் சேக்கிழார்.

தூமலர்ப் பிணையல் மாலை துணர் இணர்க் கண்ணி கோதை
தாமம் என்று இனைய வேறு தகுதியால் அமையச் சாத்தி
மாமணி அணிந்த தூய வளர்ஒளி இருள்கால் சீக்கும்
நாமநீள் கலன்கள் சாத்தி நன்மணக் கோலங் கொண்டார்.

மன்னவர் திருவும் தங்கள் வைதிகத் திருவும் பொங்க
நன்னகர் விழவு கொள்ள நம்பியாரூரர், நாதன்
தன்அடி மனத்துள் கொண்டு தகும் திருநீறு சாத்திப்
பொன்னணி மணியார் யோகப் புரவிமேற் கொண்டு போந்தார்.

எந்த ஒன்றை அணியவில்லையானால் எவ்வளவு அணிகலன்கள் அணிந்திருந்தாலும் அழகில்லையோ, எந்த ஒன்றை அணிந்தால் எல்லா அணிகலங்களையும் அணிந்த பெருமையை உண்டாக்குமோ அந்த ஒன்றைத் தான் சேக்கிழார் 'தகும் திருநீறு' என்று சிறப்பித்தருளினார்.

மணம் அழியலாம், திருநீற்றுக் காப்பிட்ட மணக் கோலம் அழியவில்லை. நம்பியாரூரர் திருவாரூருக்குச் சென்று புற்றிடங் கொண்ட பெருமானை வணங்கிப் பதிகம் பாடினார். அப்போது வானிடை ஒரு வாக்கு எழுந்தது.

"தோழமையாக உனக்கு நம்மைத் தந்தோம். முன்பு நாம் உன்னைத் தடுத்து ஆட்கொண்ட அன்று, மணவேள்விக்கு முன்னே நீ கொண்ட மணக்கோலம் ஒன்று உண்டன்றோ! அக்கோலமே உனக்கு என்றும் உள்ள கோலமாக அமையட்டும். அக்கோலமே என்றும் புனைந்து இம்மண்மேல் விளையாடுக" என்பதே அவ்வாக்கு. இதனைச் சேக்கிழார்,

வாழிய மாமறை புற்றிடங்கொள் மன்னவன் ஆரருளால் ஓர் வாக்குத்
"தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம் நாம் முன்பு தொண்டு [கொண்ட
வேள்வியில் அன்றுநீ கொண்ட கோலம் என்றும் புனைந்து நின் [வேட்கை தீர
வாழி மண்மேல் விளையாடுவாய்" என்று ஆரூரர் கேட்க எழுந்தது [அன்றே.

என்கிறார்.

ஆலாலசுந்தரன் என்ற பெயர் இந்நிகழ்ச்சிக்குப் பின் 'சுந்தரமூர்த்தி' என மாற்றம் பெற்று அன்பர்களின் வாக்கினில் தவழ்ந்து விளையாடத் தொடங்கியது.

நம்பியாரூரர், திருநாவலூரர், சுந்தரமூர்த்தி, தம்பிரான் தோழர் ஆகிய பெயர்கள் அமைந்திருப்பினும் இறைவனால் இவருக்கு இட்ட பெயர் 'வன்தொண்டர்' என்பதே.

'வன்தொண்டர்' என்ற பெயர் இவருக்கு அளிக்கப் பெறுவதற்கு உரிய காரணம் என்ன என்பதை நம்பியாரூரரே தம் தேவாரத்தில் குறிப்பிடுகின்றார். நம்பியாரூரரின் தேவாரப் பாக்களை உளங்கொண்ட காரணத்தால் சேக்கிழாரும் 'வன்தொண்டர்' என்ற பெயர் அளிக்கப் படுவதன் காரணத்தை எடுத்துரைக்கிறார்.

புத்தூர், சடங்கவி சிவாச்சாரியார் இல்லத்தில் திருமணம். நம்பியாரூரர் திருநாவலூரிலிருந்து புறப்பட்டுச் செல்கிறார். மணவேள்விக்கு முன்னால் அமர்ந்திருந்த நம்பியாரூரரிடம் வழக்குப் பேச வைதிக முனிவர் வருகிறார். மணம் தடைப்படுகிறது. மணம் வந்த புத்தூர் மணம் தவிர்ந்த புத்தூர் ஆகிறது. வழக்குத் துவங்கிய இடம் புத்தூர், வழக்கு முடிந்தது திருவெண்ணெய் நல்லூரில். வழக்கில் வென்றவன் திருவெண்ணெய் நல்லூர்ப் பித்தன்.

வழக்கில் தோற்றுவிட்ட நம்பியாரூரர், அடிமைத் தொண்டு செய்ய உடன்பட்டு, வழக்குரைத்த வேதியரின் வாழ்விடம் எது எனக் கேட்க, "காட்டுகிறேன் வா" எனச் சொல்லிச் சென்றவர், திருவெண்ணெய் நல்லூர்க் கோயிலின் உட்புக்கு மறைந்து விடுகிறார். நம்பியாரூரர் அவரைக் கூவி அழைக்கிறார். அப்போது இறைவன் இடபவாகனத்தின் மேல் தோன்றி,

" முன்பு நீ நமக்குத் தொண்டன் முன்னிய வேட்கை கூரப்
பின்பு நம் ஏவலாலே பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடர்வறத் தொடர்ந்து வந்து
நன்புல மறையோர் முன்னர் நாம் தடுத்தாண்டோம்"

என்று கூறி,

" மற்று நீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை"

என்று பெயர் சூட்டு விழாவைக் காரணத்தோடு நடத்தி வைக்கிறார்.

வன்மை பேசி, பின் அடிமையான காரணத்தால் "வன்தொண்டன்" என்ற பெயர் இறைவனால் அளிக்கப் பெற்றது என்று சேக்கிழார் கூறக் காரணமாக இருந்தது நம்பியாரூரரின் தேவாரப்பாட்டு.

" தன்மையினால் அடியேனைத் தாம்
ஆட்கொண்ட நாள் சபைமுன்
வன்மைகள் பேசிட வன்தொண்டன்
என்பதோர் வாழ்வு தந்தார்
புன்மைகள் பேசவும் பொன்னைத்தந்து
என்னைப் போகம் புணர்த்த
நன்மையினார்க்கு இடம் ஆவது
நம் திருநாவ லூரே."

(தொடரும்)

திருமாலடியார்

இராமாநுசர்

வித்துவான் திரு. கா. அ. மணவாளன், எம்.ஏ., பி.ஓ.எல்.

(13)

ஸ்ரீபாஷ்யம் தோன்றிய வரலாறு :

ஆளவந்தாரின் அருமை உபதேசங்களையெல்லாம் தம் சீடர்களுக்குச் சொல்லி வந்த இராமாநுசருக்கு ஒரு குறை இருந்தது. ஆழ்வார்களால் இயற்றப்பட்ட நாலாயிர திவ்வியப் பிரபந்தங்களின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, வேதாந்த நூலாகிய பிரம்ம சூத்திரங்களுக்கு உரை இயற்ற வேண்டுமென்பதே அக்குறையாகும். அப்படி ஒரு பாஷ்யம் இயற்றினால் அது ஆளவந்தாருடைய திருவுள்ளத்துக்கும் உகப்பாக இருக்கும் என்றும் கருதினார்.

இராமாநுசர் தாம் இயற்றப் போகும் ஸ்ரீபாஷ்யத்திற்கு, போதாயன விருத்தி என்ற நூல் பெருந்துணையாக இருக்கும் என்பதை அறிந்திருந்தார். ஆயினும் அந்நூல் இந்தியாவின் வடகோடியிலுள்ள காஷ்மீரத்தில் தான் கிடைக்கும் என்பதைப் பெரியோர்கள் வாயிலாகக் கேள்விப்பட்டார். உடனே கூரத்தாழ்வான், முதலியாண்டான் உட்பட்ட சீடர்களுடன் காஷ்மீரத்தை நோக்கிப் புறப்பட்டார்.

தென்னாட்டிலிருந்து காஷ்மீருக்கு வந்து சேர்ந்த இராமாநுசரை அந்நாட்டிலுள்ள புலவர்கள் அன்போடு வரவேற்றனர். ஆனால் இராமாநுசர் போதாயன விருத்தி நூலைத் துணையாகக் கொண்டு பிரம்ம சூத்திரங்களுக்கு உரையாக ஸ்ரீபாஷ்யம் இயற்றப் போவதைக் கேட்டவுடன் மனம் கலங்கினர். போதாயனர் இயற்றிய விருத்தி நூலை அவருக்குக் காட்டக் கூடாது என்றே அங்குள்ள வித்துவான்கள் முடிவு செய்தனர்.

இராமாநுசர் குறிப்பால் அவர்களுடைய மனநிலையைத் தெரிந்து கொண்டார். உடனே காஷ்மீரத்தின் தலைநகரான ஸ்ரீநகருக்குச் சென்று அரசனைக் கண்டு தான் வந்த காரணத்தை எடுத்துரைத்தார். இராமாநுசருடைய முகப்பொலிவையும் பேச்சின் அழகையும் கண்டும் கேட்டும் சுவைத்த அரசனே. தடையேதும் சொல்லாமல் போதாயனருடைய நூலை அவருக்கு வழங்க ஏற்பாடு செய்தான். அந்த நூலைத் தென்னாட்டுக்கு எடுத்துச் செல்லவும் அனுமதி வழங்கினான். ஆனால் அந்த நூலை அவ்வூரிலுள்ள சாரதாபீடம் என வழங்கும் கலைமகள் கோவிலில் அக்கலைமகளின் அருளைப் பெற்றவர்களே பெற முடியும் என்பதையும் கூறினான். உடனே இராமாநுசர் சாரதா பீடத்திற்குச் சென்றார். வெண்டாமரை மலர் செய்தவம் என, வீற்றிருந்தருளும் பெருமாட்டியாகிய கலைமகளைத் தண்டனிட்டுப் போற்றித் தான் வந்த காரியத்தைப் பற்றிக் கூறினார். அக்கலைமகளும் இராமாநுசரைப் பல வகை மணிகளினாலான ஒரு இருக்கையில் அமரச் செய்தாள். பின்பு

இராமாநுசருடைய அறிவின் ஆற்றலை ஆய்ந்தறியக் கருதினாள். பல வேதவாக்கியங்களைக் கூறி அவற்றை விளக்குமாறு கேட்டாள். இராமாநுசரும் தமக்கே உரிய வகையில் சிறிதும் தயங்காமல் அவற்றிற்குத் தக்கபொருள்களைக் கூறினார். நாமகளும் அப்பொருள்களைக் கேட்டுப் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தாள். இதுவரை சங்கரர் உட்பட எத்தனையோ வித்துவான்கள் சாரதா பீடத்துக்கு வந்துள்ளனர். ஆனால் இராமாநுசர் கூறியதுபோல் மனம் மகிழும் படியாக உண்மைப் பொருள்களை யாரும் கூறவில்லையே என்று சிந்தித்தாள். இராமாநுசர் மிகப் பெரிய ஞானியாக இருப்பதால்தான் இவ்வாறு கூற முடிந்தது என்று போற்றி அவருக்கு, போதாயன விருத்தி நூலைத் தானே அளித்தாள். அதோடு அவரிடம் பிரம்ம சூத்திர விளக்கங்களைக் கேட்டு மகிழ்ந்து, போதாயனரைத் தழுவி நீர் எழுதும் பிரம்மசூத்திர உரைநூலுக்கு ஸ்ரீபாஷ்யம் என்று பெயர் சூடும்படியாகவும், அதனால் உம்மை இந் நாட்டு மக்கள் ஸ்ரீபாஷ்யகாரர் என்றே அழைப்பர் என்றும் ஆசிகூறி அருள்பாலித்தாள். இராமாநுசரும் அன்னையின் கருணையைப் போற்றிப் புகழ்ந்தார். அன்னையால் வழங்கப்பட்ட போதாயன விருத்தி நூலை எடுத்துக் கொண்டு வந்து இரவு முழுவதும் கண் உறங்காமல் அருகே கூரத்தாழ்வானை வைத்துக் கொண்டு வாசித்து அறிந்தார்.

பொழுது புலர்ந்தது. இரவு நெடு நேரம் கண் விழித்த களைப்பால் இராமாநுசர் எழுந்திருக்கவில்லை. கூரத்தாழ்வானோ களைப்பையும் பாராமல் விரைவாக எழுந்து அனுட்டானங்களை முடித்துக்கொண்டு போதாயன விருத்தி நூலை முதலிலிருந்து கடைசி வரை படித்து விட்டார். அன்று பகல் நேரத்தில் ஆசானும் சீடருமாய் அந்நூலைப் பெரிதும் ஆராய்ந்தனர். இவர்கள் இப்படி இந்நூலில் எப்பொழுதும் ஈடுபட்டிருப்பதை அறிந்த சில பொறாமை கொண்ட அவ்வூர்ப் பண்டிதர்கள் இவர்களுக்குத் தெரியாமல் அந்த நூலை அபகரித்துச் சென்று விட்டனர். இராமாநுசரோ பெரிதும் கவலையுற்று, ஆழ்வானை நோக்கி "நமக்கு இப்படிப் பெரிய தனம் கிடைத்தும் அதைப் பாதுகாக்கத் தெரியாமல் இழந்து விட்டோமே, இனி என் செய்வது" என்று துன்புற்றார்.

அப்போது கூரத்தாழ்வான் இராமாநுசரை நோக்கி, "சுவாமீ, அந்த நூல் முழுவதையும் அடியேன் படித்து விட்டேன். தேவரீர் விரும்பினால் அவ்வளவையும் இப்பொழுதே திருப்பிக் கூறுகிறேன். இப்பொழுது இங்கேயே சொல்ல வேண்டுமா அல்லது இரண்டு ஆற்றுக்கு இடையே (திருவரங்கத்திலே) வந்து சொன்னால், போதுமா?" என்று கேட்டார், இவ்விதம் கூரத்தாழ்வான் கூறியவுடன் இராமாநுசர் பெருமகிழ்ச்சியடைந்தார். ஆழ்வானுடைய நுண்ணறிவும் நினைவாற்றலும் இராமாநுசருக்குத் தெரியுமாதலால் ஒருவாறு மனம் தேறினார்.

ஸ்ரீபாஷ்யத்தை இராமாநுசர் சொல்ல அதை அப்படியே கூரத்தாழ்வான் ஓலையில் எழுத்தாணியால் எழுதி முடிப்பது என்று அவர்களுக்குள்ளே ஒப்பந்தம் நிறைவேறியது. ஆனால் அதில் ஒரு நிபந்தனை இருந்தது. அதாவது எந்த ஒரு இடத்திலாவது, இராமாநுசர் சொல்லும் பாஷ்ய உரை, சூத்திரத்திற்குப் பொருந்தாமலிருந்தால், அதை ஆழ்வான் பட்டோலை செய்ய மாட்டார் என்பதே அந்த உடன்பாடாகும். எனவே குருவும் சீடருமாக நன்கு சிந்தித்து ஒப்ப முடிந்த கருத்துக்களைக் கொண்டே ஸ்ரீபாஷ்யத்தை இயற்றினர் என்பது புலனாகிறது. இவ்விதம் போதாயனருடைய விருத்தி நூலைத் தழுவி எழுதப்பட்ட ஸ்ரீபாஷ்யம் உலகெங்கும் பரவியது.

ஸ்ரீபாஷ்யம் இராமாநுசருடைய தனிப்பெரும் நூல். அந்நூலை எழுதிய காரணத்தாலேயே இராமாநுசருக்கு ஸ்ரீபாஷ்யகாரர் என்ற

பெயர் உண்டாயிற்று. சங்கரர் எழுதிய பாஷ்யத்திற்குச் சங்கர பாஷ்யம் என்று பெயர். அதுபோலவே மாத்துவாசாரியார் எழுதிய பாஷ்யத்துக்கு மத்வபாஷ்யம் என்று பெயர். ஆனால் இராமாநுசர் எழுதிய பாஷ்யத்திற்கு மாத்திரம் ஸ்ரீபாஷ்யம் என்று சிறப்பாகப் பெயர் வழங்கி வருகிறது. இராமாநுசர் ஸ்ரீபாஷ்யத்தைத் தவிர வேதாந்த தீபம், வேதாந்த சாரம், வேதார்த்த சங்கிரகம், கீதா பாஷ்யம், கத்திய திரயம் முதலிய நூல்களை எழுதி உலக மக்களுக்கு வழங்கியுள்ளார்.

இராமாநுசர் ஸ்ரீபாஷ்யத்தையும், மற்ற நூல்களையும் எழுதி முடித்த பின் சில காலம் திருவரங்கத்திலேயே தங்கியிருந்தார். அப்போது அன்னாருடம் அரங்கன் செய்யதாளிணைகளில் அகலாத பக்தியுடையவராக இருந்தமையால் இவருக்குப் பக்தி மார்க்கத்தில் அதிக ஈடுபாடு உண்டாயிற்று. "தீதில் நன்னெறி" என்று குலசேகர ஆழ்வாராலே போற்றிக் கொண்டாடப்பட்ட பக்தி நெறியாகிய ஸ்ரீவைணவ சமயத்தைப் பாரத பூமி எங்கும் திரிந்து பரப்ப முயன்றார். நின்ற விடத்தில் நில்லாமல் ஒவ்வோரூராகச் சென்று, திருமால் நெறியைப் பரப்பியவர்களான முதலாழ்வார்களை வழிகாட்டிகளாகக் கொண்டார்.

இராமாநுசருடைய சீடர்களும் மிகவும் உற்சாகமாக இதில் கலந்து கொண்டனர். அந்த திவ்விய தேச யாத்திரையில் கூரத்தாழ்வான், முதலியாண்டான், அருளாளப் பெருமானுர் எம்பெருமானர் போன்றவர்கள் முக்கியமாக விளங்கினார்கள். சோழநாட்டிலிருந்து யாத்திரை தொடங்கியது. திருக்குடந்தை என்கின்ற கும்பகோணத்திற்குச் சீடர்களுடன் வந்தார். ஆராவமுதனை வணங்கி வழிபாடு செய்தார். முன்பு நம்மாழ்வார் இந்த ஆராவமுதனின் வடிவழகிலும் குணவழகிலும் ஈடுபட்டுப் பதினெட்டு மாதங்கள் தன்னை மறந்து மோகித்துப்போன நிலையை எண்ணினார். கண்களில் நீர் பெருகத் தாமும் மோகித்துக் கிடந்தார். பின்பு சீடர்கள் ஒருவாறு தேற்றத் தேறி திருவாலி-திருநகரிக்குப் புறப்பட்டார். இது திருமங்கையாழ்வார் பிறந்த இடம்.

இராமாநுசர் சீடர் குழாத்துடன் திருவாலி-திருநகரியை நோக்கிச் சென்று கொண்டிருக்கும்பொழுது எதிர் திசையிலிருந்து ஹரிஜனப் பெண்ணொருத்தி வந்து கொண்டிருந்தாள். அப்பொழுது இராமாநுசருடைய சீடர்களில் ஒருவர் அந்தப் பெண்ணைப் பார்த்து "அம்மணீ! கொஞ்சம் விலகி வழிவிட்டால் எங்கள் குருநாதரும் நாங்களும் அப்பால் போய் விடுவோம்" என்று கூறினார். ஆனால் அந்தப் பெண் ஒதுங்கவில்லை. "அதோடு என்னை எந்தப்பக்கம் ஒதுங்கச் சொல்கிறீர்கள் சுவாமி!" என்று கேட்டாள். "வலதுபக்கத்தில் ஸ்ரீமன் நாராயணன் திருமங்கை ஆழ்வாருக்குத் திருமந்திரத்தை உபதேசித்த இடம் என்று கருதப்படும் புனித இடம் உள்ளது. இடது பக்கத்திலோ திருவாலியுள் கோயில் கொண்டிருக்கும் பெருமாள் இருக்கின்றார். ஆகையால் என்னை எந்தப் பக்கம் ஒதுங்கச் சொல்கின்றீர்கள்" என்று கேட்டாள். 'உலகம் முழுவதையும் அளந்த பெருமாளின் நிலத்தில் என்போன்ற இழி சாதியருக்கு இடமில்லையா?' என்பதே அக்கேள்வியின் பொருள்.

உடனே இராமாநுசர் அந்தப் பெண்ணிடம் மன்னிப்புக் கேட்டார். "என்னுடைய சீடர்களுக்கு அறிவுமிகுந்திருந்தும் ஆணவத்தால் உன்னை ஒதுங்கச் சொன்னார்கள். 'உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்' என்று நம்மாழ்வார் கூறியபடி எல்லா இடங்களிலும் நிறைந்து நிற்கும் இறைவனை நீ உணர்ந்தபடி. இவர்கள் உணரவில்லை. சாதியால் உயர்வு தாழ்வு பார்க்கும் இவர்களைவிட, நீதான் சிறந்த வைணவியாக விளங்குகின்றாய்" என்று சொல்லி அவளுக்குத் தம் அருள் ஆசியை வழங்கினார்.

இவ்விதம் இராமாநுசர் வழி நெடுகத் தம் சீடர்களுக்குப் பல நிகழ்ச்சிகளின் வாயிலாக உண்மை நிலையை விளக்கிக் கொண்டே சென்றார். திருவாலி-திருநகரியில் திருமங்கை மன்னனையும், பெருமாளையும் வணங்கி விட்டுப் பாண்டிநாடு நோக்கிப் புறப்பட்டார். பாண்டி நாட்டில் மொத்தம் பதினெட்டு திவ்விய தேசங்கள் உள்ளன. திருமாலிருஞ்சோலை, ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற திவ்வியத் தலங்களில் வழிபாடு செய்து விட்டு, பொருநை நதி பாயும் திருநெல்வேலிச் சீமையை அடைந்தார். நவதிருப்பதிகள் என்று சொல்லப்படும் ஒன்பது ஊர்களில் ஒன்றான திருப்புளிங்குடிக்கு வந்து, சீடர்களுடன் பெருமாளை வணங்கினார். அங்கிருந்து திருக்குருகூரை நோக்கிப் புறப்பட்டார். கோயிலை வலமாக வந்துகொண்டிருக்கும்போது, எதிரே வந்த அந்த ஊர்ப் பெண்களைப் பார்த்து, "இன்னும் திருக்குருகூர் எவ்வளவு தொலைவில் இருக்கின்றது?" என்று கேட்டார். அதைக் கேட்ட பெண்கள் "பெரிய திருமண்காப்பை இட்டுக் கொண்டிருக்கும் உமக்குத் திருவாய்மொழி தெரியாதோ" என்று ஏளனம் செய்தனர். உடனே இராமாநுசர் "எனக்கு நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி அனைத்தும் மனப்பாடம் ஆயிற்றே" என்றார். "அப்படியாகில் "கூவுதல் வருதல்" என்ற பாசுரம் தெரியாதோ" என்று கேட்டனர். உடனே இராமாநுசருக்குப் புரிந்து விட்டது. கூவுதல் வருதல் என்ற திருவாய்மொழிப் பாட்டாலே புளிங்குடியிலிருந்து கூப்பிடு தூரத்தில்தான் திருக்குருகூர் உள்ளது என்பதை எவ்வளவு நயமாக அவர்கள் உணர்த்தி விட்டார்கள் என்பதை எண்ணி வியந்தார். அதோடு அந்த ஊர்ப் பெண்கள் திருவாய்மொழியைப் பொருளோடு ஓதி உணர்ந்திருப்பதையும் அறிந்து போற்றினார்.

அப்பெண்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்று நிகழ்ந்ததைக் கூறினர். பெற்றோர் வெளியே வந்து பார்த்தபொழுது, இராமாநுசர் எழுந்தருளியுள்ளார் என்பதை உணர்ந்தனர். உடனே அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கித் தங்கள் வீட்டுப் பெண்கள் வாய் துடுக்காகப் பேசி அபசாரப்பட்டதற்கு மன்னிப்புக் கேட்டனர். இராமாநுசரோ அப்பெண்களின் வாயிலாகத் திருவாய்மொழியின் அருமபொருள்களை உணர்ந்தேன் என்று சொல்லி அவர்களைக் கொண்டாடினார்.

நீர்வளத்தாலும், நிலவளத்தாலும், நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியாகிய தமிழ் தழுவிய பக்தி வளத்தாலும் செழித்து விளங்கும் திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரியைக் கண்டு பரவசமானார். 'இதுதான் திருநகரியோ! இதுவேதான் பொருநல் என்னும் தாம்பிரபருணி நதியோ! வேதம் தமிழ் செய்த மாறனாகிய நம்மாழ்வார் அவதரித்த ஊர் இதுதானே! இதுவோ பரமபதத்து எல்லை!' என்றிவ்வாறெல்லாம் மகிழ்ச்சிப் பெருக்கால் போற்றிப் புகழ்ந்தார். ஆழ்வார் திருநகரியைத் திருக்குருகூர் என்று அழைப்பது உண்டு. அங்கு வாழும் நம்மாழ்வாரைக் குருகைப்பிரான் என்றும் கூறுவர். நம்மாழ்வாருக்குப் பல திருப்பெயர்கள் உண்டு. சடகோபன், மாறன், காரிமாறன், பராங்குசன், வகுளாபரணன், வேதம் தமிழ் செய்த பெருமாள்—இப்படிப் பல பெயர்களால் போற்றப்படும் நம்மாழ்வாரைத் தொழுது, ஆழ்வார் திருநகரி என்னும் அந்த திவ்விய தேசத்தில் இராமாநுசர் சில காலம் தங்கி இருந்தார்.

இதுவோ திருநகரி, ஈதோ பொருநல்
இதுவோ பரம பதத்(து) எல்லை!—இதுவோதான்
வேதம் தமிழ்செய்து மெய்ப்பொருட்கு முப்பொருளால்
ஓதும் சடகோபன் ஊர்.

(தொடரும்)

"தீவினை தீர்க்கும் தீர்த்தமலை"

புலவர் ப. மாணிக்கம்-கோட்டை.

"பதியுடனே பசுபாசம் அநாதியாகும்
பதிபரமாம் உயிர்பசுவாம் பாசம் மூன்றும்"

என்பது தலபுராணத் 'தாதா' சைவ எல்லப்ப நாவலரது அருளுரை. இஃது தீர்த்தமலை தலபுராணத்தில் உள்ளது. பதி-பசு-பாசம் என்ற மூன்றும் அநாதி என்பதும்; பதி என்பது இறைவனையும், பசு என்பது உயிர்களையும், பாசம் என்பது ஆணவம்-கன்மம்-மாயை என்ற மும்மலங்களையும் குறிக்கின்றது என்பதும் இதன் பொருள்.

உயிர்-இறைவனாகிய பதியை அடைய வேண்டுமேயானால், பாசத்தை வளர்க்கும் ஆணவம்-கன்மம்-மாயையிலிருந்து விடுபட வேண்டும். அவ்வாறு விடுபட நற்குருநாதன் நமக்கு வாய்க்க வேண்டும். 'குரு' நமக்கு வாய்ப்பது இறையருளினாலேயே சாத்தியப்படுவதாகும். எனவே, நற்குருநாதனைத் தந்தருள் அல்லது சற்குருநாதனாக நீயே எம்முன் எழுந்தருள் என இறைவனை நாம் பல்கால் உண்மையான உருகும் உளத்துடன் வேண்டிக்கோடல் வேண்டும்.

"குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"

என, அருணகிரிப் பெருமான் முருகப்பெருமானை வேண்டுதல்போல ஆகும்.

மேலும், "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொழுதவர்க்கு, வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்ற தவப். பெரியார் தாயுமானவசுவாமிகளின் பொன்னுரைகளை நீள நினைப்பின், நற்குருநாதனை நாம்பெற அவர் கூறும் வழிகள், (1) மூர்த்தியை வலம் வந்து வணங்குதல் (2) தலங்களிலே தங்குதல் (3) புனித நீரிலே மூழ்குதல் என்பவைகளாகும். இதற்கு விளக்கம் தருமாப்போலே, குமர குருபர சுவாமிகள்,

தீர்த்தம் என்பது சிவகங்கையே,
ஏத்தரும் தலம் எழிற்புலியூரே
மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே

என்று தெளிவுபடுத்தி உரைத்துள்ளார்கள். அவ்வாறு அறுதியிட்டு உரைத்திருப்பினும், சிவகங்கையை ஒத்த பிற தீர்த்தங்களும் நம் நாட்டில் உள என மனக்கொளல் வேண்டும். அதில் ஒன்று, கோடை நீடினும், கொட்டும் பெருமழை பொழியினும், மிகாது, குன்றாது எப்போதும் ஒரே அளவுடன் பொழியும் தீர்த்தமலை தீர்த்தமாகும்.

தீர்த்தமலை 'தகடூர்' என்று அன்றும் 'தர்மபுரி' என்று இன்றும் வழங்கும் மாவட்டத்தில் அரூருக்கு அருகில் உள்ள சிற்றூர். இவ்வூரில் அடிவாரத்தில் ஒரு சிவன் கோவிலும், மலைமீது ஒரு சிவன் கோவிலும்

1500 ஆண்டுகளுக்குமுன் அமைக்கப்பட்டனவாய் அமைந்துள்ளன. இங்கு எழுந்தருளியுள்ள இறைவனுக்குத் தீர்த்தகிரீசுவரர் என்றுபெயர். இறைவிக்கு, வடிவழகியம்மை என்று பெயர்.

இத்திருக்கோயிலில், 1905ல் படி எடுக்கப் பெற்றனவாகப் பத்தொன் பது கல்வெட்டுக்கள் உள. அவைகள் 'தீர்த்தமலை' என்றே இவ்வூரைக் குறிக்கின்றன. இப்பெயர் சோழமன்னன் முதலாம் இராசேந்திரன் காலமுதல் வழங்கி வருவதாகக் கொள்ளலாம்.

'நிகரிலி சோழ மண்டலத்துக் கலிங்க நாட்டுப் புறமலை நாட்டுத் தகடூரில் பெண்ணையாற்றின் தென்கரையில் தீர்த்தமலை அமைந்துள் ளது' என்பது கல்வெட்டுத் தரும் செய்தியாகும்.

இத்திருக்கோயில்களைக் கட்டியது யார்? எப்போது? என்பவைகள் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், முதலாம் இராசேந்திரனின் 29ஆம் ஆட்சியாண்டு கி.பி. 1041ல் இராசேந்திர சோழ விரியூர் நாட்டுத் தலைவனான உத்தம சோழப் பெருமலை நாடாள்வான் என்பான் இத் திருக்கோயிலைப் புதுக்குவிப்பதற்கும், முன் மண்டபம் எழுப்புவதற்கும் மூன்று ஊர்திகளைக் கொடையாக அளித்த செய்தி காணப்படுகின்றது.

முதலாம் இராசேந்திரன் காலத்தில் இக்கோயில் புதுப்பிக்கப்பட்டது என்பதால் அவனது ஆட்சிக்காலத்திற்கு முன்பே, அதாவது 1500 ஆண்டுகளுக்கு முன்பே, இத்திருக்கோயில்கள் கட்டப்பட்டிருக்க வேண்டும் என யூகிக்க முடிகின்றது. "அர்ச்சனையால் அகலும் மலம்-அகன்றால் ஈசன் இணையடிக்கீழ் உயிர் இருக்கும் ஆதலாலே பொற் சைல வடிவாகி இறைவன் தீர்த்தப் பொருப்பெனவே இருந்தார்" என்ற தீர்த்தமலைத் தலக் குறிப்பாலும்,

"சென்றாடு தீர்த்தங்கள் ஆனார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே"

என்ற திருநாவுக்கரசரின் திருத்தாண்டகக் குறிப்பாலும், இறைவன் தீர்த்த மயமாகவும் இருப்பான் என்பது புலனாகின்றது. எனவே இத் தீர்த்தமலையே இறைவன் உருவம் எனக்கோடல் சால்புடைத்தாம்.

இம்மலையின் உச்சியில் வசிட்ட தீர்த்தமும், இடையில், இராம தீர்த்த மும், அக்னி தீர்த்தம், கௌரி தீர்த்தம், குமார தீர்த்தம், அகத்திய தீர்த் தம் முதலிய தீர்த்தங்களும், அடிவாரத்தில் இயமதீர்த்தமும் உள்ளன என்பதை,

"சென்னி கீழ் இடைதரும் தீர்த்தம் மூன்றினால்,
மன்னிய தீர்த்தமால்வரை என்று ஓதுவார்."

என்ற அடிகள் தெரிவிக்கின்றன. மேலும் மற்றொரு பாட்டில்,

போதக ஆதியின் மதம் போலக்காணும் ஒன்று
ஓத வாரிதியிலும் ஓதைகாட்டும் ஒன்று
ஈதலால் கூவலோடு எழுந்து தோன்றும் ஒன்று
ஆதலால் வரையெலாம் அரிய தீர்த்தமே

எனக் கூறப்பட்டிருத்தலால், யானையின் மதநீர் போல ஒரு தீர்த்தம் வரும் என்றும், கடல் ஒலிபோல ஒரு தீர்த்தம் ஒலி செய்து கீழிறங்கும் என்றும், கிணறு போல சில தீர்த்தங்கள் தோன்றும் என்றும் தெரிகின்றது. தீர்த்தமலைத் தீர்த்தம், கங்கை முதலாகிய தீர்த்தங்களினும் சிறந்தது என்பதை,

பார்க்குளேயுள கங்கையா திகளெலாம் பார்த்தோம்
கார்க்குலாவிய தீர்த்தமால் வரைக்கு இணைகாணோம்"

என்ற வரிகளால் அறியலாம். இஃது இராமபிரான் சீதாப்பிராட்டிக்குக் கூறுவதாக அமைந்துள்ளது. இராமபிரான் இங்குத் தங்கிச் சிவபூசனை செய்தார் என்பது,

"விஞ்சுகின்ற ஐந்து தீர்த்தம் வீழுநல் லிடத்திலே
முஞ்சியைப் படுத்திருந்து பஞ்சிமத்து முகமதாய்
நெஞ்சமுக் கறுத்து நீறணிந்து நியமமும்
அஞ்சுசுத்தி பண்ணிஈசன் அர்ச்சனைக் குள்ளாயினன்"

என்ற திருப்பாடலால் அறிகின்றோம்.

இஃதேயன்றி வசிட்ட மாமுனிவர், தனது நூறு பிள்ளைகளையும் சாம்பராக்கி, தன்னையும், வாபிசாரம் என்னும் அக்கினிக்கு உண்ணக் கொடுத்த விசுவாமித்திரனின் தொடுமைகளை எல்லாம் சகித்துக் கொண்டது மட்டுமன்றி, அதனால் ஏற்பட்ட துன்பங்களைத் தீர்த்தகிரியிலே சென்று மேவி நம்பர் பூசை செய்து சோகம் மாறினர் என்பதனாலும், வில்லவன்-வாதபி என்ற இரு அசுரர்களை அழித்ததனால் ஏற்பட்ட பெருந்துன்பத்தை இம்மலைக்கு எழுந்தருளி, நீராடி சிவபூசனை செய்து போக்கிக் கொண்டார் அகத்தியர் என்பதனாலும் இம்மலை தீவினை தீர்க்கும் மா, மருந்து மலை என்றும் தெரிகின்றது.

சைவரா யவரும் பெருந்தவஞ் செய்வார்களும்
வையகம் முழுவதும் வலம்செய் வார்களும்
பையநீர்க் கங்கையிற் படிகுவாரும் இத்
தெய்வமால் வரையிடைத் தீர்த்த மாடுவார்

சரியையின் நெறிவளர் தகைமை யாளரும்
கிரியையும் யோகமும் கிடைத்த வீரரும்
பொருவரும் வடக்குமீன் போலும் கற்புடைத்
தெரிவையர்களும் இதில் தீர்த்த மாடுவர்

என்பதனால் இம்மலையில் உள்ள தீர்த்தத்தின் பெருமை புலனாகும். அனைத்து சித்திகளையும் அருளவல்லது இம்மலை என்பதை,

அட்டசித்தி உதவுமலை அநேகமுள ஆனாலும்
இட்டசித்தி உதவுமிடம் இதுபோல இலைஎவர்க்கும்
கிட்டரிய காயசித்தி கிரியையுடன் யோகசித்தி
மட்டரிய ஞானசித்தி மற்றெவையும் பெறலாமே

என்ற திருப்பாடல் தெரிவிக்கின்றது.

தவசாரகிரி, பஞ்சபூதகிரி, சிவசைலம், தீர்த்தமலை, கங்காகூடம், புனல்சடிலம், சித்தநிவாசம், நிரந்தரம், நியாதிநாசம், துரிதகரம், சோககரம், இராமேட்டம், சுவாமிசிங்கம் எனப் பதின்மூன்று பெயர்களால் இம்மலை அழைக்கப்படுகின்றது.

"பாட்டில் உருகிலை" என்ற திருப்புகழில்,

தீர்த்த எனதக மேட்டை யிடரினை
ஏத்த அருளுடன் நோக்கி அருளுதி
தீர்த்த மலைநகர்காத்த சசிமகள் பெருமாளே

என அருணகிரிப் பெருமான் இம்மலையினைப் பாடிக் களிக்கின்றார்.

மாசிமகப் பெருவிழாவும், அதனை ஒட்டி அன்று நடைபெறும் படி விழாவும் கண்டு மகிழத்தக்கவை. கீழ்த்திருக்கோயிலில் உள்ள கலை நிறை கணபதியின் அழகும்-அதிகாரநந்தியின் நின்ற திருக்கோல அழகும் நெஞ்சை விட்டு நீங்காதவை.

இத்தகைய சிறப்புடையதுதான் தெய்விகமான தீர்த்தமலை. யோகத்தலமாகிய தீர்த்தமலைக்கு வருகைதந்து புண்ணிய நீராடி, புனித தெய்வமாகிய வடிவாம்பிகை உடனுறை தீர்த்தகிரீசுவரரை வணங்கி வாழ்வாங்கு வாழ்வீர்களாக.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் புராணம்

கொற்றவன்குடி உமாபதிசிவம் அருளிச்செய்த மூலமும்

திருக்கயிலாய பரம்பரைத் திருவண்ணுமலை ஆதீனம் ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் அருளிய பதவுரையும்

பிரதி செய்தவர்: சேக்கிழார்தாசன் இராமசேஷன்

சேவைகாவலர் புராணகாதை தொகை
செயநினைந்தெமை யகன்றபின்
யாவர்தாமரு கிருந்தபேர்கள்கதை
சென்றதெவ்வள விருந்ததெங்
காவதென்னிவைக ளறியவேண்டும
தறிந்துவாருமென வளவர்கோ
னேவினு னுரிய தூதர்தூதரறி
யாமலொற்றரையு மேவினுன். 54

(இ-ள்): சேவை காவலர் புராணகாதை தொகைசெயநினைந்தெமை யகன்ற பின்-சேக்கிழார் நாயனர் புராணக் கதையைப் பிரித்துத் தொகைசெய்ய நினைத்து எம்மைவிட்டு நீங்கினபின்பு; யாவரருகிருந்த பேர்கள்- அவரருகிலிருந்தவர்கள் யாவர்; கதை சென்ற தெவ்வள விருந்ததெங்கு-இதுவரைக்கும் புராணம் எவ்வளவாயிற்று எங்கே யிருந்து புராணத்தை இயற்றுகின்றனர்; ஆவதென்னிவைகளறிய வேண்டும்-இனி ஆக வேண்டியது யாது அவைகளை நான் தெரிந்து கொள்ள வேண்டுமாதலால்; அதறிந்து வாருமென-அது தெரிந்து வருகவென்று; வளவர்கோன்-அநபாயசோழன்; உரிய தூதரேவினுன்-உரிமையான தூதர்களை அனுப்பினுன்; தூதரறியாமலொற்றரையு மேவினுன்-அத்தூதுவர்கள் அறியாமல் ஒற்றர்களையும் அனுப்பினுன். (எ-று). தாம்-அசை. இம்மூன்றுங் குளகம்.

வென்றிவேல்வளவ னளவறிந்துவர
விட்டகாளையர் புராணநூ
லொன்றுபாதிகதை சென்றதென்றுசில
ரோடினுர்சில ருவந்துசென்
றின்றுநாளைமுடி யும்புராணமினி
யென்றுரைத்திட விறைஞ்சினுன்
சென்றுநற்கதை முடிந்ததென்றுசிலர்
செம்பியற்குறுதி செப்பினுர். 55

(இ-ள்): வென்றிவேல் வளவன்-வெற்றி பொருந்திய வேற்படையை யுடைய அநபாய சோழன்; அளவறிந்து வரவிட்டகாளையர்-புராணம் எவ்வளவாயிற்றென்று அறிந்துவரும்படி ஏவிய தூதுவருள்; ஒன்று கதை பாதி சென்றதென்று சிலர் ஓடினுர்-அப்புராணத்திலடங்கிய சரித்திரம் பாதியாயிற்றென்று சிலர் விரைந்து வந்து சொல்லினர்; சிலருவந்து சென்று-சிலர் மிகுந்த மகிழ்ச்சியுடன் சென்று; புராணம்

இனியின்று நாளை முடியுமென்றுரைத்திட-புராணம் இனி இன்றைக்குள் நாளைக்குள் முடிவுபெறுமென்று சொல்லக்கேட்டு; இறைஞ்சினன்-அத்திசையை நோக்கி வணங்கினன்; சிலர் சென்று நற்கதை முடிந்ததென்று-அதன்பின் சிலர் சென்று நன்மை பொருந்திய அப்புராணம் நிறைவேறியதென்று; செம்பியற் குறுதி செப்பினர்-அநபாய சோழனுக்கு உறுதியாகச் சொல்லினர். (எ-று).

வந்து சொன்னவர்க ளனைவருக்குநவ
மணிகளுந்துகிலு மம்பொனுஞ்
சிந்தியள்ளியு முவந்துவீசியுயர்
செம்பொனம்பல மருங்கில்வா
ழந்திவண்ணர் நட மும்பணிந்துமுத
லடியெடுத்தவர் கொடுத்திடப்
புந்திசெய்துமகிழ் சேவைகாவலர்
புராணமுந்தொழுவ னெனு. 56

(இ-ள்): வந்து சொன்னவர்களனைவருக்கும்-இவ்வாறு வந்து சொல்லிய தூதுவர்களுக்கெல்லாம்; நவமணிகளுந் துகிலுமம் பொனும்-நவரத்தினங்களையும் அழகிய பொன்னையும்; சிந்தியள்ளியுமுவந்துவீசி-மிகுந்த மகிழ்ச்சியுடன் எடுத்தெடுத்துக் கொடுத்து; உயர் செம்பொனம்பல மருங்கில்வாழ்-மாற்றுயர்வாகிய பொன்மயமான சிற்சபையில் வீற்றிருக்கின்ற; அந்தி வண்ணர் நடமும் பணிந்து-செவ்வான நிறத்தையொத்த திருமேனியையுடைய நடேசப்பிரானது நடனத்தையும் வணங்கி; முதலடியெடுத்தவர் கொடுத்திட-அந் நடேசப்பிரான் முதலடியெடுத்துக் கொடுத்தருள; புந்தி செய்து மகிழ் சேவைகாவலர்-அதை முதலாக வைத்துக் கொண்டு பாடி மகிழ்ச்சியுற்ற சேக்கிழார் நாயனர் அருளிய; புராணமுந் தொழுவனெனு-புராணத்தையும் நான்சென்றுதொழுவேனென்று யத்தனித்து. (எ-று).

வீதிவீதிக டொறுந்தொறும்பயண
மென்றுவென்றிமணி முரசறைந்
தோதிவேதியர்க ளெண்ணியிட்டவுயர்
நாளுமோரையுமு கூர்த்தமும்
போதநாடிவரை புரைகடக்களிறு
புரவிதேர் கருவி யாடரச்
சாதுரங்கமுட னேசெலப்பிளிறு
தந்திமேல்கொடு நடந்தனன். 57

(இ-ள்): பயணமென்று-சிதம்பரத்திற்குப் பயணம் புறப்படவேண்டுமென்று; வீதிவீதிக டொறுந்தொறும்-வீதிவீதிகள் தோறும்; வென்றி மணிமுரசறைந்து-வெற்றி பொருந்திய பெரிய பேரிகை முழக்கி; ஓதிவேதியர்களெண்ணியிட்ட-நல்ல கணித சாத்திரிகள் தெரிந்து கணித்துச் சொல்லிய; உயர்நாளுமோரையு முகூர்த்தமும் போதநாடி-சுபதினமும் இலக்கினமும் முகூர்த்தமும் நன்குய்த் தெரிந்துகொண்டு வரைபுரை கடக்களிறு புரவிதேர் கருவியாள் சாதுரங்கமுடனே தரச் செல-மலையையொத்த மதயானை குதிரை தேர் காலாள் என்னும் சதுரங்க சேனைகளும் தம்முடன் சூழவரும்படி; பிளிறு தந்திமேல் கொடு நடந்தனன்-அநபாய சோழன் முழங்குகின்ற பட்டத்துயானை மீதேறிச் சென்றனன். (எ-று). இவ்விரண்டுங் குளகம்.

தேர்முழக்கொலி மழைக்கடக்கரட
சிந்துரக்களிறு பிளிறுசீ
ரார்முழக்கொலி பரிச்செருக்கொலி
பதாதிவந்தெதி ரடர்ந்தெழும்
போர்முழக்கொலி சழக்கிலாதுயர்
படைக்கலன்புணரு மோசையேழ்
கார்முழக்கொலியி னெட்டிரட்டி நிறை
கடன்முழக்கென முழக்கெழ. 58

(இ-ள்): தேர்முழக்கொலி-இரதம் ஒலிக்கின்ற ஒலியும்; மழைக்கடக் கரடசிந்துரக்களிறு-மேகத்தைப் போல மதம் பொழிகின்ற சிந்தூர மெழுதிய யானைகள்; பிளிறு சீரார்முழக்கொலி-பிளிறுமொலி செய்கின்ற பெரிய ஓசையும்; பரிச்செருக்கொலி-குதிரைகள் கனைக்கின்ற ஒலியும்; பதாதிவந்தெதிரடர்ந்தெழும் போர்முழக்கொலி-பதாதிகள் ஒருவர்க் கொருவர் எதிரில் வந்து நெருங்கிக் கொர்ச்சிக்கா நின்ற பேரொலியும்; சழக்கிலாதுயர் படைக்கலன் புணருமோசை-குற்றமில்லாத கூரிய ஆயுதங்கள் ஒன்றுடனொன்று தாக்குதலாலுண்டாகின்ற ஓசையும்; ஏழ்கார் முழக்கொலியினெட்டிரட்டி நிறை-சத்தமேகங்களின் ஒலியைப் பார்க்கிலும் பதினாறுபங்கு அதிகமாக நிறைந்த; கடன் முழக்கென முழக்கெழ-கடல் முழக்கம் போல முழங்க. (எ-று).

வளவர்கோன்வர வறிந்துதில்லைமறை
யோரும் வண்மைமட பதிகளும்
பிளவுகொண்டமதி நுதன்மடந்தையரு
மற்றுமுள்ள பெரியோர்களுங்
களவிலாதமொழி கொடுபுராணகதை
செய்த கங்கைகுல திலகருந்
தளவமாலையப யனையெதிர்ந்தினிய
சாரவாசிபல சாற்றினர். 59

(இ-ள்): வளவர்கோன் வரவறிந்து-அநபாய சோழன் வரவினை அவ் வோசையினால் தெரிந்து; தில்லைமறையோரும் வண்மை மடபதிகளும்-தில்லைவாழந்தணர்களும் வளப்பமிகுந்த மடாதிபதிகளும்; பிளவு கொண்ட மதிநுதன்மடந்தையரும்-பாதிமதிபோலும் நெற்றியையுள்ள மாதர்களும்; மற்றுமுள்ள பெரியோர்களும்-இன்னுமுள்ள பெரியோர் களும்; களவிலாத மொழிகொடு-வெளிப்பட்ட அசரீரி வாக்கைக் கொண்டு; புராணகதை செய்த கங்கை குலதிலகரும்-திருத்தொண்டர் புராணமாகிய கதையை இயற்றிய சேக்கிழார் நாயனாரும்; தளவமாலைய பயனை யெதிர்ந்து-முல்லைமலர் மாலையையுடைய அநபாய சோழனை எதிர்கொண்டு; இனிய சாரவாசிபல சாற்றினர்-இனிய பயனைத்தரா நின்ற ஆசிமொழிகள் பலவாகச் சொன்னார்கள். (எ-று). இவ்விரண்டுங் குளகம்.

முண்டமானதிரு முடியுமிட்டதிரு
முண்டமுங்கவச முந்துணைக்
குண்டலங்களு மிரண்டுகாதினும்
வடிந்தலைந்தகுழை யுந்திருக்
கண்டமாலைகர மாலையுஞ்சிரசு
மாலையுங்கவின் விளங்கவே
தொண்டர்சீர்பரவு வானணைந்த
சுப சரிதைசோழனெதிர் கண்டனன். 60

(இ-ள்) : முண்டமான திருமுடியும்-முண்டிதமாகிய திருமுடியும்; இட்ட திரு முண்டமும் கவசமும் திரிபுண்டரமாகத்தரித்த விபூதியும் உருத்திராக்கங்களும்; துணைக்குண்டலங்களும்-இணையாகிய குண்டலமும்; இரண்டு காதினும் வடிந்தலைந்த குழையும்-இரண்டு காதினிடத்துந் தொங்கியசைந்து கொண்டிரா நின்ற கண்டிகையும்; திருக்கண்டமாலை-கழுத்திலணியும் உருத்திராக்க கண்டிகையும்; கரமாலையுஞ் சிரசு மாலையுங் கவின் வ்ளங்க-கைக்கட்டும் சிரத்தின் மாலையும் அழகு பொருந்த; தொண்டர் சீர்பரவு வானணைந்த-திருத்தொண்டர் புராணத்தை நிறைவேற்றிய சேக்கிழார் நாயனுர் வந்தருளிய; சுப சரிதை சோழனெதிர் கண்டனன்-மங்கலகரமான செயலை அநபாய சோழன் கண்ணினுல் எதிராகக் கண்டான். (எ-று). ஏ-அசை.

குண்டலம்-ஆறு உருத்திராக்கங்கள் சேர்ந்தமைந்த காதணி. குழை-மணியிழைத்து வட்டமாய்ச் சதுரப்படவியற்றிய காதணி. கண்ட மாலை என்றதனுல் இனம்பற்றி உரமாலையும், கரமாலை என்றதனுல் இனம்பற்றிப் புயமாலையுங் கொள்க. ஈண்டுச் சரிதை என்றது செயலை.

கண்டபோதுள மகிழ்ந்து தன்னையறி
　　யாதுகைகடலை மீதுறக்
கொண்டவேடமர னடியர்வேடமிது
　　குறைவிலாததவ வேடமென்
றண்டவாணர்திரு வருளையுன்னியவ
　　ரடிமைகொண்ட பெருமையை நினைந்
தெண்டயங்கரச ரேறுசேவையர்
　　குலாதிபாதுகை யிறைஞ்சினுன். 61

(இ-ள்): கண்டபோதுளமகிழ்ந்து-கண்டவுடன் உள்ள மகிழ்ந்து; தன்னையறியாது கைகடலை மீதுற-தன்னையறியாமல் இரண்டு கைகளும் அஞ்சலியாகச் சிரசின்மீது பொருந்த; கொண்டவேட மரனடியர் வேடம்-இவர் கொண்டிருக்கும் வேடம் சிவனடியார் வேடமே; இது குறைவிலாத தவவேடமென்று-மேலும் இது குறைவில்லாத தவவேடமே என்று; அண்டவாணர் திருவருளையுன்னி-தேவ தேவனுகிய சிவபிரான் கிருபையை நினைந்து; அவரடிமை கொண்ட பெருமையை நினைந்து-அவர் அடிமையாகக் கொண்ட பெருமையையுஞ்சிந்தித்து; எண்டயங்கரசரேறு-யாவரெண்ணத்தும் வீற்றிருக்கும் அரசராகிய யானைகளுக்கு ஆண் சிங்கத்தையொத்த அநபாய சோழன்; சேவையர் குலாதிபாதுகை யிறைஞ்சினுன்-சேக்கிழார் நாயனுரது திருவடிப்பாதுகையில் வணங்கினன். (எ-று).

தான் அரசன், இவர் மந்திரி என்னும் பகுப்பின்றித் தன்னையிழந்து வணங்குதலில் தன்னை யறியாது கைகடலை மீதுற என்றும், அரன் வேடமே அரனடியார்க்குரிய வேடமாமென்னும் சிறப்பு நோக்கிக் கொண்ட வேடமரனடியர் வேடமென்றும், இவர் வேடம் வேடமாத்திர மன்றிச் சிவபிரானையுணரும் மெய்ப்பத்தியோடு சேர்ந்து நிற்றலில் குறைவிலாத தவவேடமென்றுங் கூறினர்.

(தொடரும்)

உ

திருவருள் துணை

திருவிழா கொண்டாடும் முறைகளும் நாட்களும்

(வித்துவான் ந. சண்முகசுந்தர தேசிகர்)

விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, கந்தர்சட்டி, மகாசிவராத்திரி கொண்டாடும் முறைகளும் நாட்களும்

உலகில் மக்கள் பல சமய நெறிகளை மேற்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். அவர்களில் சில சமய நெறியினர் ஞாயிற்றை முதன்மையாகக் கொண்டும், சில சமய நெறியினர் திங்களை முதன்மையாகக் கொண்டும் விழாக்கள், நோன்புகள் கொண்டாடி வருகின்றனர். ஞாயிற்றைக் கொண்டு கணக்கிடும் மாதத்திற்குச் "சௌரமானம்" என்றும், திங்களைக் கொண்டு அளவிடும் மாதத்திற்குச் "சாந்திரமானம்" என்றும் கூறப்பெறும்.

சைவர், வைணவர் ஞாயிற்றைக் கொண்டு அளவிடும் சௌரமானத்தில் விழாக்கள், நோன்புகள் கொண்டாடுவர். தமிழர் சமய நெறி நாயன்மார்கள் போற்றிய சைவ நெறியும், ஆழ்வார்கள் போற்றிய வைணவ நெறியுமாகும். எனவே சௌரமானமாகிய ஞாயிற்றைக் கொண்டு கணக்கிடும் மாதங்களில்தான் தமிழர் கொண்டாடவேண்டும்.

அதற்குரிய சான்றுகள்

1. பூர்வ காரணாகமம்—மகோற்சவ விதிப்படலம்
"சௌரமாசம் பிரசஸ்தம்ஹி சாந்திரமாசோ ப்ரசஸ்தகம்"

பொருள் :—சௌரமாதமே மேலானது, சாந்திரமாதம் அற்பமானது.

2. உத்தர காரணாகமம்—சிவராத்திரி பூசா விதிப்படலம்
"சௌரமானே விரதம் குர்யாத் சாந்திர மானே நகாரயேத்"
பொருள் :—சௌரமானத்தில் விரதம் செய்யத் தகுந்தது; சாந்திர மானம் தகாதது.

3. காமிகாமம்—நவராத்திரி விதி கூறுமிடம்.
"சௌரமாநேந கர்த்தவ்யம்
சாந்திமாநே நகர்த்தவ்யம் கிருதஞ்சேது ராஷ்டிர நாசனம்"

மேற் குறிப்பிட்ட சான்றுகள் மூலம் சௌரமானமே கொள்ளத் தகுந்தது என்று அறியலாம்.

4. "......சர்வே ஷாம் சௌரமாநகம்
பரார்த்தேசால யேஷ்வேஷு சௌரமாநேந காரயேது"
பொருள் :—எல்லோருக்கும் சௌரமானமே உரியது. பரார்த்த ஆலயங்களுக்கெல்லாம் சௌரமானமே கொள்ளத்தக்கது.

5. சிவாகம பிரயோக சந்திரிகை உற்சவப் படலம்
"மாசஞ்ச துவிவிதம் புரோக்தம் சௌரஸ்யாது சாந்திரமாநகம்.
சௌரமானேன கர்த்தவ்யம் விரதஞ்சோத்சவம் உத்தமம்.
அதமம் சாந்திரமானேன சைவாதீனுந்து நிஷ்பலம்."

பொருள் :—மாதங்கள் சௌரமானமென்றும் சாந்திரமான மென்றும் இரண்டு வகையாகச் சொல்லப்படுகின்றன. சைவநெறி சார்ந்தவர்களுக்கும் வைணவ நெறி சார்ந்தவர்களுக்கும் விரதங்களும் திருவிழாக்களும் சௌரமானப்படி செய்யத்தக்கனவை. அதுவே நல்லது.

6. சிந்திய விசுவ சாதாக்கியத்தின்—வாக்கியம்
"ஜன்ம ரிக்ஷம் தீர்த்த நக்ஷத்திரம் திதி முக்கியவிரதம்ததா
சௌரமாசேஷு கர்த்தவ்யம் நாந்நியமாச திரயேவிது.
ஸ்தாபனம் புரோக்ஷணம் தீக்ஷா சிவராத்திரிஸ் சிவோத்சவ:
சௌரமாசேஷு கர்த்தவ்யம் சாத்திரமாஸே பவித்ருகம்"

பொருள் :—பிறந்தநாள், தீர்த்தநாள், திதி முக்கிய நோன்புகளெல்லாம் சௌரமாதத்தில் செய்யவேண்டும். பிற மாதங்களில் செய்யக்கூடாது. அப்படியே ஸ்தாபனம், புரோக்ஷணம், தீக்ஷை, சிவராத்திரி, சிவோற்சவம் ஆகியவை சௌரமாதத்தில் செய்யத்தக்கன. சாந்திர மாதத்தில் பவித்தோற்சவம்.

மேற்கண்ட சான்றுகளால் ஞாயிற்றைக் கொண்டு அளவிடும் மாதத்திலேயே விழாக்கள், நோன்புகள் மேற்கொள்வது தலையாயது என்பது தெரியவருகிறது.

சைவ, வைணவ திருக்கோயில்களில் எல்லாம் விழாக்கள் சௌரமான மாதங்களிலேயே நடைபெறுகின்றன. சித்திரை விழா சித்திரை மாதத்திலேயே தொடங்கி முடிவாகிறது. சித்திரை விழா வைகாசியில் முடிவது ஒருபோதுமில்லை. ஒவ்வொரு விழாவிற்கும் அதன் முடிவே முதன்மையானது. தொடக்கம் முதன்மையானதல்ல. சித்திரைவிழா சில ஆண்டுகளில் பங்குனி மாதத்தில் தொடங்கிவிடும். அவ்வாறே மற்ற விழாக்களும் ஆகும்.

பிள்ளையார் சதுர்த்தி

பிள்ளையார் சதுர்த்தி என்பது விநாயகப் பெருமான் தோன்றிய நாள். கச்சியப்பமுனிவர் விநாயக புராணத்தில் பிள்ளையார் பிறந்த நாளைப் பற்றி "இவ்வாறு தலைவர் அவதரித்த கைவல் பந்தமறும் ஆவணித் திங்களின் வளரும் சதுர்த்தி எனப் பகர்வர்" என்றும், பின்னேரிடத்தில் பிள்ளையார் கூற்றாகவே

"சிங்கமாமதி யிடைச் சேர்முன் பக்கத்துத்
தங்குநம் சதுர்த்தி" எனவும் கூறியுள்ளார்.
சுவாயம்புவாகம்—விநாயகோற்சவப் படலம்

1. "அதவக்ஷ்யே விசேஷேண விக்னேசோத்ஸவமுத்தமம்
சர்வ பாபஹரம் புண்யம் சர்வயோக சுகாவஹம்ப"

2. ஆதௌ தீர்த்தம் விநிச்சித்ய தத்பூர்வே பஞ்சமேபிவா
சப்தமே நவமேவாபி திருதீயே த்வஜமாரபேத்
ச்ராவணே விக்நராஜஸ்ய சதுர்த்யாஞ்ச ரதோத்சவம்
தத்திநே தீர்த்த கிருத்யஞ்ச பஞ்சம் யாம்வா விசேஷத :"

இதன் பொருள் :—

1. இனி அனைவருக்கும் நன்மையைத் தருவதாயும் பாவங்களனைத்தையும் போக்குவதாயும் மேலானதாயுமுள்ள புண்ணியமான விநாயகோற்சவத்தைச் சிறப்பாகக் கூறுகிறேன்.
2. முதலாவது தீர்த்தநாளை உறுதி செய்து கொண்டு அதற்குமுன் மூன்ருவது நாளிலாவது ஐந்தாவது நாளிலாவது ஏழாவது நாளில்லாவது ஒன்பதாவது நாளிலாவது கொடியேற்ற வேண்டும்.
3. ஆவணி மாதத்தில் விநாயகருக்குச் சதுர்த்தியில் தேரோட்டம் செய்யவேண்டும். அதே நாளில் தீர்த்தவாரியும் செய்யலாம். பஞ்சமியிலும் தீர்த்தவாரி செய்யலாமென்பது மற்ருெரு கருத்து.

நவராத்திரி—மகாநவமி

நவராத்திரி என்பது ஒன்பது இரவு எனப் பொருள்படும். புரட்டாசி மாதம் வளர்பிறைப்பிரதமை முதல் நவமி முடிய ஒன்பது நாட்களும் பார்வதி தேவியைப் பூசித்துத் திருவிழாக் கொண்டாடல் வேண்டும்.

காமி காகமம்

" கன்யா ஸிதப் பிர தமா மாரப்ய
நவம் யந்த முமா விரதம்"

பொருள் :—புரட்டாசியில் வளர்பிறைப் பிரதமை முதல் நவமி முடிய நவராத்திரி என்பது.

"சௌரமாநேந கர்த்தவ்யா நவராத்திரி விசேஷத:
சாந்திரமாநே நகர்த்தவ்யா..........."

இதனுல் நவராத்திரி சௌரமானத்தில் செய்தல் சிறப்புடையது என்று அறிகின்ருேம்.

யாமள தந்திரம்

"ததஸ்ச கன்யா மாசேது பூர்வபக்ஷே விசேஷத :
பிரதமாயாம் சமாரப்ய நவம்யந்த பிரபூஜயேது என்றும்,

அகோர சிவாசாரியார் தமது நவமி பூஜாவிதி

மாஸி பாத்திரபதே பக்ஷேசுக்லே பிரதிபதாதிகம் நவம் யந்தம் விசேஷண பூஜயித்வா மகேஸ்வரீம்"

என்றும் கூறியிருப்பதால் நவராத்திரி புரட்டாசி மாதத்தில் கொண்டாட வேண்டுமென்பது தெளிவாகிறது.

விஜய தசமி

மகுடாகமம்

"கன்யா மாசே சிதே பக்ஷே தசாஹேது திதித்வயே சமீபூஜாச
கர்த்தவ்யா தசம்யாம் சைவகாரயேத்"
பொருள்:—புரட்டாசியில் வளர்பிறை பத்தாவது நாளில் சமி
பூசை செய்க.

அஜிதாகமம்

"கன்யா மாசே சிதேபக்ஷே தசம்யாம்ச சமீம்யஜேத்
பூர்வாஹ்ணேவா பராஹ்ணேவா தசாஹே திதிசம்பவே
தத்காலேது விசேஷேண விதிவத் பூஜயேத் குரு.

என்றும்,

காரணாகமம்

மாஸே பாத்ரபதே சுக்லே தசம்யா ராதனம் குஹ
சாதிதௌ மிருகயாத்ராச சைவாகமேஷு பாஷிதம்

என்றும் கூறியிருப்பதால் விசயதசமியும் புரட்டாசி மாதத்தில் கொண்டாடவேண்டுமென்பது தெரிய வருகிறது.

கந்தர்சட்டி விழா

முருகப்பெருமான் சூரபன்மனை ஆட்கொண்டருளிய நாள் ஐப்பசி மாதத்தில் வளர்பிறைச் சட்டியாம். இதனையே, கந்தபுராணம் கந்த விரதப் படலத்தில் (செய்-20)

1. வெற்பொடும் அவுணன்தன்னை வீட்டிய தனிவேற் செங்கை
"அற்புதன் தன்னைப் போற்றி அமரரும் முனிவர் யாரும்
சொற்படு துலையின் திங்கள் சுக்கில பக்கந் தன்னில்
முற்பகல் ஆதியாக மூவிரு வைகல் நோற்றார்."

என்றும்,

2. சகஸ் ராகமம் ஸ்கந்தோத்ஸ்வ விதிப்படலத்தில்,
"துலாயாம் ரவிஸம்ப் ராப்தௌ சுக்லபக்ஷே விசேஷத:
ஷஷ்டியந்து முத்ஸவம் குர்யாத் சாந்யமாஸம் நகாரயேத்

பொருள்:—ஞாயிறு துலாராசியை அடைந்த அளவில் சிறப்போடு கூடிய வளர்பிறையில் சட்டி வரையிலும் திருவிழா நடத்த வேண்டியது. பிறமாதங்களிற் செய்யக் கூடாது.

என்றும்,

3. கௌசிகப்பிரஸ்ந குமாரதந்திரத்தில்,—
அதாத சம்பிரவச்யாமி ஸ்கந்த ஷஷ்டி விதிம்ஸ்ருணு
நவாஹஞ்சாபி சப்தாஹம் ஷஷ்டாஹஞ்ச திரியாஹகம்
அதவாதத் திநேவாபி சோத்ஸவஞ்ச சமாசரேது
துலாயாம் ரவிசம்பிராப் தௌ சுக்லபக்ஷே விசேஷத:

ஷஷ்டியந்தம் உத்சவம் கிருத்வா சாந்யமாஸே நகாரயேது
காரயேது யதிமோஹோ கர்த்தா போக்தா விநஸ்யதி
உத்ஸ்வாரம்ப காலேது துவிமாஸம் ஸம்பவேத்யதி
நதோஷ : இதிவிக்யாத ஸ்கந்த ஷஷ்டி துலாரவௌ
துவிவாரே கண்டிதேதித்யாம் ராத்ரௌ வியாபி விசேஷத :
திவாவியாப்தம் நகர்த்தவ்யம் கிருதஞ்சேது கர்மநாசனம்
சௌரமானேந கர்த்தவ்யம் சாந்திரமானே நகாரயேது

(இதன் பொருள் :—கந்தர் சட்டி விதியைச் சொல்கிறேன் கேட்பாயாக. ஒன்பது நாளாவது ஏழுநாள், ஆறுநாள், மூன்றுநாள் அல்லது அதே நாளாவது விழா செய்யத்தக்கது. துலாத்தில் ஞாயிறு வந்தபோது வளர்பிறையில் சிறப்பாக சட்டி முடிய விழாச் செய்க. மற்ற மாதத்தில் செய்யற்க. மயக்கத்தினுல் செய்வானேயானுல் செய்பவனும் செய்விப்பவனும் நாசமடைகிருர்கள். விழாத் தொடக்கத்தில் இரண்டு மாதம் தொடர்பானுலும் குற்றமில்லை என்று கூறப்படுகிறது. கந்தர் சட்டி துலாமாதத்தில் (ஐப்பசியில்)தான். இரண்டு நாளில்திதி வருமானுல் இரவில் இருக்கும் நாளே மேலானது .பகலில் இருக்கும் நாளில் செய்யக்கூடாது. சௌரமானமே செய்யத்தக்கது.)

என்றும் கூறியிருத்தலால் கந்தர்சட்டி ஐப்பசி மாதம் வளர்பிறை சட்டித் திதியில் கொண்டாடவேண்டும் என்பது தெரிய வருகிறது.

மகாசிவராத்திரி

இது மாசி மாதம் தேய்பிறைச் சதுர்த்தசியில் சிவபெருமானைக் குறித்துக் கொண்டாடப்பெறும் நோன்பு ஆகும். சதுர்த்தசியோடு அமாவாசை ஒரு விநாடியேனும் கூடினும் அன்று இந்த நோன்பு கொள்ளக்கூடாது. அதற்கு முந்திய நாளே கொள்ளுதல் வேண்டும். அமாவாசை சம்பந்தப்படாத சதுர்த்தசி நாள் கிடைக்காவிட்டால் அன்று கழுவாய் செய்து சிவபெருமானை வழிபடல் வேண்டும். ஆனுல் இக்குற்றம் சதுர்த்தசியோடு திருவோணமாவது திங்கட்கிழமையாவது சேர்ந்தால் நீங்கும் என்று ஆகமங்களெல்லாம் கூறுகின்றன.

இதுவரையில் கண்ட ஆகமவாக்கியத்தின்படி இவ்வாண்டில் வரும் விநாயக சதுர்த்தி ஆவணி மாதத்தில் 5ஆம் நாள் (21-8-74) புதன் கிழமையிலும்; மகாநவமி புரட்டாசி மாதத்தில் 8ஆம் நாள் (24-9-74) செவ்வாய்க் கிழமையிலும்; விசயதசமி புரட்டாசி மாதத்தில் 9ஆம் நாள் (25-9-74) புதன் கிழமையிலும்; கந்தர்சட்டி ஐப்பசி மாதம் 4ஆம் நாள் (21-10-74) திங்கட் கிழமையிலும்; மகாசிவராத்திரி மாசி மாதம் 26ஆம் நாள் (10-3-75) திங்கட் கிழமையிலும் கொண்டாடப்பெறவேண்டும்.

எனவே, சைவ, வைணவ திருக்கோயில்களிலும்; அந்நெறிகளைப் பின்பற்றும் திருமடங்களும் மக்களும் மேற்கண்ட விழாக்களையும் நோன்புகளையும் மேற்கூறிய நாட்களில் கொண்டாடி நற்பயன் அடையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சமயபோதனை

பாடம் 5 — வினாக்கள் — ஆகஸ்ட்டு 1974.

வினாக்கள் இந்த இதழ்க் கட்டுரைகள் பற்றியனவே ஆகும். விடைகளை முழு அளவு (Foolscape size) இரண்டு தனித் தாள்களில் நான்கு பக்கத்திற்குள் எழுதி இச்செயலகத்திற்கு 31-8-1974க்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவேண்டும். சந்தா எண், பெயர், வயது, முகவரி இவற்றைத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

மதிப்பெண் சமம்] [மதிப்பெண் 100

1. திருமூலதேவநாயனார் அருளிய திருமந்திரத்தில் காணப்பெறும் பாடபேதங்கள் எவை எவை? அவற்றின் உண்மையை ஆய்க.
2. வடதிருமுல்லை பெயர்க் காரணத்தைப் பற்றியும், தல நூல்களைப் பற்றியும் எழுதுக.
3. ராமலிங்கசுவாமிகள் திருமுல்லைவாயிலை எங்ஙனம் துதிக்கிறார்?
4. எந்நிகழ்ச்சிக்குப்பின் ஆலால சுந்தரருக்குச் சுந்தரமூர்த்தி என்ற பெயர் வழங்கலாயிற்று?
5. 'வன்தொண்டர்' என்ற பெயரால் விளிக்கப்பெறுகிறவர் யார்? அவருக்கு அப்பெயர் வரக் காரணம் யாது?
6. ஆழ்வானுடைய நுண்ணறிவையும் நினைவாற்றலையும் விளக்கும் வரலாற்றைச் சுருக்கி எழுதுக.
7. தீர்த்தமலையின் சிறப்பை விளக்குக.
8. சேக்கிழார் புராணம் எந்நிலையில் உள்ளது என்பதை மன்னன் எவ்வாறு அறிந்து வரச் செய்தான்? செய்தி கேட்ட மன்னன் செய்த செயல்கள் யாவை?
9. "கண்டபோதுள மகிழ்ந்து" எனத் தொடங்கும் பாடலின் கருத்தைச் சொந்த நடையில் எழுதுக.
10. திருவிழாக்களைத் தமிழர் எம்முறையில் கணக்கிட்டுக் கொண்டாடுகின்றனர்? அதற்குரிய காரணத்தைச் சான்றுகள் காட்டி விளக்குக.

விடைகளை எழுதி உரிய அஞ்சல்தலை யொட்டிக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவேண்டும்:—

"அருளோசை"

தமிழ்நாடு தெய்விகப் பேரவை,

9, மகாராஜா சூரியராவ் சாலை,

ஆள்வார்பேட்டை,

சென்னை-600018.

திருவள்ளுவர் ஈராயிரம்
ஆண்டு சிறப்பு மலர் 4-00

[திருக்குறள் 2000 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட நூல். மனிதன் எவ்வளவோ முன்னேறி நாகரிகங்களையும் பண்பாடுகளையும் வளர்த்துக்கொண்ட இந்நாளிலும் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் கருத்துக்கள் அமைந்த நூல். நூலின் சிறப்புக் குறித்தும், நூலாசிரியரின் நுண்ணறிவு குறித்தும் தமிழாய்ந்த அறிஞர் பெருமக்கள் பல கோணங்களில் ஆய்ந்து கண்ட நாற்பதுக்கும் மேற்பட்ட கட்டுரைகள் கற்பார் சிந்தைக்கு விருந்தளிக்கின்றன. தமிழ் இலக்கியத்தில் ஆர்வமுடையவர்கள் அனைவரும் படித்துப் பயன் பெறவேண்டும் என்ற எண்ணத்தில் வெளியிடப்பட்ட அடக்கவிலைப் பதிப்பு நூல் இது. 5 ரூபாய் விலையுள்ள இந் நூல் தற்போது நான்கு ரூபாய்க்குக் கிடைக்கும்.]

திருஞானசம்பந்தர் 1-00

[சிறுவர்-சிறுமியர்க்குச் சமயத் தலைவர்களின் வரலாற்று நிகழ்ச்சிகளை, படவிளக்கங்கள் கொண்ட பாடப் புத்தகமாக அச்சிட்டு வெளியிடுவதென்ற நோக்கத்தில் முதல் புத்தகமாக வெளிவந்துள்ளது இந்நூல். திருஞானசம்பந்தரின் வரலாற்று நிகழ்ச்சிகளைச் சித்திர வடிவில் மிகத் தெளிவாக இந்நூல் விளக்குகின்றது. சிறப்பாக அமைந்துள்ள வண்ண ஓவியங்கள் நூலுக்குச் சிறப்புத் தேடுகின்றன. ஞானசம்பந்தரின் வரலாறு குறித்து மாணவ-மாணவிகள் எளியமுறையில் அறிந்துகொள்ளும்பொருட்டு தமிழ் விளக்கமும் அதற்கேற்ப ஆங்கில மொழிபெயர்ப்பும் கொண்ட இனிய நூல். எல்லோரும் அவசியம் படிக்கவேண்டிய நூல்.]

பிற வெளியீடுகள்

அபிராமி அந்தாதி	0-15
விநாயகர் அகவல்	0-10
சிவபுராணம்	0-10

விவரங்களுக்கு

பேரவைப் பதிப்பகம்
தமிழ்நாடு தெய்விகப் பேரவை,
9, மகாராஜா சூரியராவ் சாலை,
சென்னை-600 018.

உ

திருச்சிற்றம்பலம்

அருளியல் வினவல்

(திருமுல்லைவாயில்)

கங்கைஅஞ் சடைகொண் டோங்கு செங்கனியே
கண்கள் மூன்றுடைங்கு செங்கரும்பே !
மங்கல் இல் லாத வண்மையே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே !
துங்க நின் அடியைத் துதித்திட்டேன் எனினும்
தொண்டனேன் கோயில்வந் தடைந்தால்
எங்குவந்தாய் ? நீயார் ? என வேனும்
இயம்பிடா திருப்பதும் இயல்போ ?

—திருவருட்பிரகாச வள்ளலார்

திருச்சிற்றம்பலம்

Edited, Printed at Peravai Achakam and Published by A. Narayanaswamy, B. A., for the Tamil Nadu Deivika Peravai at No. 9. Maharaja Surya Rao Road, Alwarpet, Madras-600018.